விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 173 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 26 ஞாயிற்றுக்கிழமை (09.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

தமிழகத்தின் ஆதரவின்றி

## மோடி வெற்றி பெற்றிருப்பது இலங்கைக்கு சாதகமானது



### உதய கம்மன்பில எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழகத்தின் ஆதரவின்றி இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் வெற்றி இலங்கைக்குச் சாதகமாக அமையும் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார். (தொடர்ச்சி 19)

## இந்தியாவின் பிரதமராக மோடி இன்று பதவியேற்பு



### ஜனாதிபதி ரணிலும் பங்கேற்கின்றார்

(புதுடில்லி)

இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி மீண்டும் மூன்றாவது முறையாக இன்று பதவியேற்கவுள்ளார்.

இந்திய ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் மோடி மற்றும் அவரது அமைச்சரவை உறுப்பினர்களுக்கு இந்திய ஜனாதி (தொடர்ச்சி 19)

# தேர்தல் சுதந்திரமாக நியாயமாக நடைபெறும்

## ஐரோப்பிய பிரதிநிதிகளிடம் பிரதமர்

(கொழும்பு)

அரசியல் சாசனத்தின்படி தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெறும் என ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பு ஆய்வுக்குழுவிடம் பிரதமர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



அறிவோர் ஒன்றுகூடும்

## அரசியற் கருத்துக்களம் இன்று

(யாழ்ப்பாணம்)

மக்கள் மன்றில் ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமையும் பொதுநிலைப்பாடும் பொது வாக்கெடுப்பும் எனும் தொனிப் பொருளில் அறிவோர் ஒன்றுகூடும் அரசி (தொடர்ச்சி 19)

போலி நாணயம்

## திருநெல்வேலியில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

போலி நாணயத்தாளுடன் நபர் ஒருவரை கோப்பாய்பொலிஸார் திருநெல்வேலியில் கைது செய்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

கடந்த வியாழக்கிழமை கொழும்பிலி (தொடர்ச்சி 19)

யாழில் சுயமரியாதை நடை பயணம்

## இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகரும் பங்கேற்பு



(தொடர்ச்சி 19)

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகப் போட்டி

### பெரமுனவுக்கு ரணில் சொன்ன பதில்



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிடுவதற்கு தான் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு அறிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நடந்த சந்திப்பில் இந்தத் தகவலை உறுதிபட அறிவித் (தொடர்ச்சி 19)

## முல்லையில் வீடு புகுந்து இளைஞன் மீது தாக்குதல்

### சந்தேகநபர் கனடாவுக்கு தப்பியோட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வற்றாப்பளை பகுதியிலுள்ள வீடொன்றினுள் நுழைந்த கும்பல் வீட்டிலிருந்த இளைஞனை தாக்கியதை தொடர்ந்து, சந்தேகநபரொருவர் கனடா நாட்டுக்கு தப்பித்துச் சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 3 தினங் (தொடர்ச்சி 19)

## சஜித் இன்று யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் யாழ்.விஜயத்தின்போது,

யாழ்.மாவட்டத்தின் 13 பாடசாலை (தொடர்ச்சி 19)

## 31 கிலோ கஞ்சாவுடன் மணற்காட்டில் ஒருவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை மணற்காட்டில் 31 கிலோ கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (தொடர்ச்சி 04)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நாகபூஷணி திருமண சேவை

(பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்)

மிகப்பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்யப்பட்டு மிகத் துரிதமாகத் திருமணம் நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர்

10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
(BCAS கம்பஸுக்கு பக்கத்து லேன்)

**021 222 9306, 077 138 7596, 071 999 9306** (1156)

## தென்னிந்திய தலயாத்திரை மற்றும் சுற்றுலா

(சென்னை, மதுரை, கன்னியாகுமாரி, திருவனந்தபுரம், ராமேஸ்வரம்)

பிரசித்தி பெற்ற ஆலயங்களை தரிசிப்பதோடு சுற்றுலாத் தளங்களையும் கண்டுகளிக்கலாம். (1142)

கட்டணத்தில் உள்ளடங்குபவை: **07 நாட்கள்**

- இருவழி விமானப் பயணச்சீட்டு
- குளிரூட்டப்பட்ட(A/C) வாகனம்
- குளிரூட்டப்பட்ட(A/C) தங்குமிடம்
- மூன்று வேளை உணவு(சைவம்)
- சுற்றுலா மேலாளர்
- நுழைவுக்கட்டணங்கள்
- தேநீர், குளிர்பானங்கள்
- மேலும் பல...

இறையருளுடன் இனிமையான நினைவுகளை உருவாக்கிக்கொள்ள.


தொடர்புகொள்ளுங்கள்: **076 946 4568**

**SRI BABY ENTERPRISES(PVT)LTD**

ராணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்/ மகாத்மா வீதி, நெல்லியடி, யாழ்ப்பாணம்


## மரண அறிவித்தல்

பிறப்பு
02 - 06 - 1926



இறப்பு
05 - 06 - 2024

### திரு. இளையப்பா சட்டநாதர்

(முன்னாள் கிராமசபை உறுப்பினர் – மறவன்புலோ)

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.இளையப்பா சட்டநாதர் அவர்கள் 05.06.2024 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்க்ளான இளையப்பா - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிதம்பரத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் மனோகரன், மகேஸ்வரன், பரமேஸ்வரி, பரமேஸ்வரன், நகுலேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற குணலிங்கம் மற்றும் யோகாதேவி, அருள்மணி, சரவணபவன், நமோநிதி, சரவணபவான், குமாரசாமி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், காசிப்பிள்ளை, சண்முகம் மற்றும் வல்லிபுரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கேதீஸ்வரன் - சுபாஜினி, சுபாஜினி - முகுந்தன், சுமதி - ஜீவசுரேன், மணிமாறன் - மதுரிகா, சுதாமினி - மைக்கல், நிஷாந்தன் - துவாரகா, செந்தூரன் - பசிலே, சோனியா - சுதர்ஷன், சீதுவன், ஆதவன் - சர்லொத், அஜந்தா - யெயன், அனுஷா, கஜேஸ்வரா - அனுஷியா, கயறாஜ் - விஜிதா, கஜலக்ஸ்மி - சசிகரன், மதியுகன் - ரேணுகா, கேசறாஜ் - சரண்யா, சுயானா, வாசனா, தினுசா, பானுசா, சோபிதன், சோபிகா - பிரணவன், கிருசிகா ஆகியோரின் அன்புப் பேரனும் அனாமிகா, தூரிகன், பிரவீன், சாருஜன், சஸ்மிதன், ஆதிரா, ஆதினி, ஆதிரன், நிகாரிகா, நெய்ல், லீலா, அயலான், நிலா, அஜய், சதுஸ்ரிகா, சபரிஷன், கபினாஸ், கேஸ்விகன், தஸ்வின், திபர்ஷன், கோசினி, சமிதா, எகந்திகா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (09.06.2024) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (1138)

ஆறுமுகம் வீதி,
கந்தரோடை, சுன்னாகம். 077 445 2598

தகவல்:
குடும்பத்தினர்

## தேர்தல்...

பிரதமர் தினேஷ் குணவர்தன, ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு பணியின் ஐரோப்பிய ஒன்றிய ஆய்வுக் குழுவுடன் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தல்கள் தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாடிய பிரதிநிதிகள், அரசாங்கம் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் உடன்படிக்கை செய்துகொண்டதன் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு முறைகள் குறித்து விளக்கமளித்தனர்.

அடுத்த தேர்தல் தொடர்பில் வதந்திகள் பரவி வருவதாக அவர்கள் கூறியபோது, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அரசியலமைப்பு விதிகள் மிகத் தெளிவாக இருப்பதாகவும், இது தொடர்பான அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே வெளியிட்டுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

அரசியல் சாசனத்தின்படி தேர்தல் நடத்தப்படும் என்றும், தேர்தல் சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெறும் என்றும் அவர் உறுதியளித்தார்.

நாடு முழுவதிலும் உள்ள ஒன்பது மாகாணங்களுக்கும் கண்காணிப்பாளர்கள் அனுப்பப்பட்டு தேர்தல் அதிகாரிகள், வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள், ஊடகப் பிரதிநிதிகள், உள்நாட்டு பார்வையாளர்கள் மற்றும் வாக்காளர்களைச் சந்திக்கவுள்ளதாக தூதுக்குழுவின் குழுத் தலைவர் மெட்டே பேக்கன் தெரிவித்தார்.

சட்டப் பணிப்பாளர் ஜயதிஸ்ஸ டி கோஸ்டா, ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுக்கு முன்மொழியப்பட்ட தேர்தல் சீர்திருத்தங்களை விளக்கினார்.

ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழு தேர்தலுக்கு 2 நாட்களுக்குப் பிறகு ஒரு பூர்வாங்க அறிக்கையையும், இரண்டு வாரங்களுக்குள் விரிவான அறிக்கையையும் சமர்ப்பிக்கும் என்று ஐரோப்பிய ஒன்றிய தூதரகத்தின் துணைத் தலைவர் லார்ஸ் பிரெடல் தெரிவித்தார். (ம-7,10)


## கடை வாடகைக்குண்டு

சங்கானை மாக்கெற்றுக்கு அருகாமையில் ஓடக்கரை வீதியில் 400 சதுர அடி கொண்ட முதலாம் மாடிக்கடை வாடகைக்கு உண்டு. ஒருங்கிணைந்த மலசலகூட வசதி உண்டு. (1108)

**077 392 7010**

## தேவை

பயணம் மற்றும் பயணச்சீட்டு வணிகத்திற்காக யாழ்ப்பாணத்தில் வணிக இடத்தைத் தேடுகின்றோம். 1000 சதுர அடி தேவை. யாழ் நகரம் மற்றும் மருத்துவமனை வீதி (நகருக்கு அருகில்) அல்லது பேருந்து நிலையத்திற்கு அருகில், ஸ்டான்லி வீதிக்கு இடையில் அல்லது அதன் சுற்றுவட்டாரத்தில். (1159)

**072 281 5930**

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரம், A9 வீதியில் 03 பரப்புக் காணி அவசர தேவைகருதி மலிவான விலைக்கு விற்பனைக்குண்டு. (C-559)

தொடர்புகளுக்கு:
**076 430 1811**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள BBW தொடர் இலக்கமுடைய HONDA ACTIVA மோட்டார் சைக்கிள் (2014 மொடல்) உடன் விற்பனைக்கு உண்டு. (1157)

**077 711 5596**

## வேலையாட்கள் தேவை

கொக்குவிலில் இயங்கி வரும் பான்சி கடை ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை. அடிப்படை சம்பளம் - 35,000 /- light vehicle வாகனம் ஓடத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (1143)

**075 223 1078**

## காணி விற்பனைக்கு உண்டு


யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- இருபது அடிப்பாதை (20)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும். (1128)

**Golden Real Estate (pvt) Ltd**
**Director & Owner : T.Kalaithasan**
**077 029 4164, 077 329 4130, 077 294 1521**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர். கந்தையா சாமி

( K.S. அம்பாள் மினிபஸ் உரிமையாளர் )

**மலர்வு: 01.11.1934 உதிர்வு: 09.06.2009**

துன்பங்கள் பல கடந்த போதும்
எமக்கு இன்பத்தை மட்டும்
பரிசளித்த எம் அன்பு அப்பாவே
சொல்ல வார்த்தைகள் இல்லை
உங்கள் அன்பின் எல்லையை!
பதினைந்து ஆண்டுகள் கடந்து விட்டோம்
உங்கள் சுவட்டில்
எப்போதும் நடப்போம் நாம்

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர். திருமதி. யசோதா திரவியம்

( K.S. அம்பாள் மினிபஸ் உரிமையாளர் சாமி அவர்களின் மகள் )

**மலர்வு: 31.05.1966 உதிர்வு: 20.06.2021**

அன்பெனும் ஒற்றை வார்த்தைக்காய்
அனைத்தையும் விட்டுக்கொடுத்து
தன் உறவுகளைக் கட்டிக்காத்து
யாவரும் மகிழ்வாய் இருக்க வேண்டும் என
பார்த்துப் பார்த்து பணி செய்யும் அக்காவே!
ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்து விட்டன
உங்களை எப்படி மறப்பது?

(0083)

1/5 பலாலி வீதி,
2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பரூக்கி வேகம், ரஷித் சுழலில் சரணடைந்தது நியூசிலாந்து



ரி-20 உலகக்கிண்ண லீக்போட்டியில் ஆப்கானிஸ் தான் 84 ரன்கள் வித்தியாசத் தில் வெற்றி பெற்றது.

ரி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் வெஸ்ட் இண்டீஸ் கயனாவில் உள்ள பிரோவிடன்ஸ் மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் ஆப்கானிஸ்தான்- நியூசிலாந்து அணிகள் மோதின.

டாஸ் வென்ற நியூசிலாந்து பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன் படி ஆப்கானிஸ்தான் அணி முதலில் பட்டிங் செய்தது. தொடக்க வீரர்களான ரஹமதுல்லா குர்பாஸ்.இப்ராஹிம் ஜத்ரன் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத் தினர்.குறிப்பாக குர்பாஸ் சிக்சர் மழை பொழிந்தார். அவர் 56 பந்தில் 5 பவுண்டரி, 5சிக்சருடன் 80 ரன்கள் விளாசினார். இப்ராஹிம் ஜத்ரன் 41 பந்தில் 44 ரன்கள் எடுத்தார். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 14.3 ஓவரில் 103 ரன்கள் குவித்து நல்ல அடித்தளம் அமைத்தது.

அதன்பின் வந்த ஓமர்ஜா யை (13 பந்தில் 22 ரன்) தவிர வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தனர். இதனால் ஆப்கா னிஸ்தான் 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 159 ரன்கள் குவித்தது.

பின்னர் 160 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கியது. நியூஸிலாந்து அணியின் முதல் பட்ஸ்மன் ஆன ஆலன் முதல் பந்திலேயே ஆட்டம் இழந்தார்.

அதன்பின் நியூசிலாந்து விக்கெட்டுகள் சீட்டு கட்டுபோல் சரிந்தது. கான்வே 8 ரன்னிலும், கேன் வில்லியம்சன் 9 ரன்னிலும், டேரில் மிட்செல் 5 ரன்னிலும், பிளிப்ஸ் 18 ரன்னிலும் ஆட்டமிழந்தனர்.

பரூக்கி, ரஷித்கான் தொடர்ந்து விக்கெட்டுகளை சாய்க்க 15.2 ஓவரில் 75 ரன்னில் சுருண்டது நியூசிலாந்து.

இதனால் ஆப்கானிஸ்தான் 84 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் தொடர்ந்து இரண்டு போட்டிகளில் ஆப்கானிஸ்தான் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

'நான் கொடுப்பதற்கு பழகிக் கொண்டேன் - காரணம் என்னிடம் அதிகம் இருப்பதால் அல்ல - இல்லாதவரின் வலியைப் புரிந்து கொண்டதால்'

## (22) விற்பனைக்கு (22)

- யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 12 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட 3 கடைகளும்
- யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 20 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட காணித் துண்டும்
- யாழ்.மின்சார நிலைய வீதியில் முதலாம் ஒழுங்கையில் 1½ பரப்பில் அமைந்த வீடும்
- யாழ்.மின்சார நிலைய வீதியில் 2ம் ஒழுங்கையில் 2 பரப்பு வெறுங் காணியும்
- யாழ்.மின்சார நிலைய வீதியில் பழைய தபாற்கந்தோர் வீதியில் 4½ பரப்புக் காணியும்
- யாழ்.பிறவுண் வீதியில் 5 பரப்புக் காணியும் 2 பரப்புக் காணியும்
- மன்னார் நகருக்கு அண்மையில் நல்ல நிலையில் இயங்கிவரும் மில்லும்
- யாழ்.தட்டார்தெரு சந்திக்கு அண்மையில் 5 பரப்புக் காணியும்
- யாழ்.திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் ஆடியபாதம் வீதியில் 5 பரப்புக் காணியும்
- யாழ் பலாலி வீதியில் பலாலி வீதி முகப்புடன் 5 பரப்பில் அமைந்த மாடி வீடும்
- யாழ்.மின்சார நிலைய வீதியில் 10 அடி அகலமும் 10 அடி நீளமும் கொண்ட தனிக்கடையும் உடன் விற்பனைக்கு உண்டு.

**கனகசபை தர்மகுலசிங்கம்**

**0777 232 535**

(C-0558)




## 31 கிலோ...

இராணுவப் புலனாய்வுப் பிரிவின ருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக் கமைய குறித்த கைது நேற்று முன்னெ டுக்கப்பட்டுள்ளது.


மணற்காட்டுப் பகுதியைச் சேர்ந்த 31 வயதானவரே இவ்வாறு பருத்தித் துறை பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



இந்நிலையில் சந்தேகநபரை சட்ட நடவடிக்கைக்காக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத் துள்ளனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்






தோற்றம்
2001.03.12

மறைவு
2024.03.11

## அமரர் தவச்செல்வன் பவித்திரன் (பவி)

(கொம்பியூட்டர் மார்ட் உரிமையாளரும் சாவல்கட்டு சங்கானை வைரவர் ஆலய செயலாளரும்)

அன்பின் இருப்பிடமே.
பாசத்தின் உறைவிடமே பண்பின் சிகரமே எம்மை விட்டுப் பிரிந்து 90 நாட்கள் ஆனதே இதயங்கள் நொருங்க கண்ணீரைத் துளியாக்கி கண் இமைக்கும் நேரத்தில் எங்கே பயணம் ஆனாய். விதி செய்த சதியோ சதி செய்த விதியோ நாம் அறியோம். உன் குடும்பத்திற்கு நீ தூணாய் துணை நிற்பாய் என்று நம்பி இருந்தோமே. கயவரின் சதியால் எல்லாம் கனவாகிப் போனதுவே காவலில் நின்ற கடற்படையும் கயவரின் வருகை கண்டு அடைக்கலம் கேட்டு நின்ற உன்னை அடித்து விரட்டியதோ. ஆறாது மாறாது உன் துயர் தீராதையா உடலை அழிக்கலாம். உன் நினைவுகளை அழிக்க யாராலும் முடியாதையா எங்கள் இதயங்களில் நீ வாழ்கின்றாய் நீ உயிராய் நேசித்த தொழிலே உன் கொலைக்கு சாட்சியும் ஆனதையா மீண்டும் எம் குடும்பத்தில் வந்து ஆறுதல் தந்துவிடு உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.




அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து பல வழிகளிலும் உதவி செய்தவர்கள் உலகத்தின் பார்வைக்கு செய்தியை தெரிவித்த ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கள்ளி வீதி, வட்டு தென் மேற்கு
வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்.

(1125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தினால் தமிழர்களுக்கு ஏன் தீர்வு தர முடியாது?

## சாணக்கியன் கேள்வி

(கொழும்பு)

தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஏன் தமிழர்களுக்கான தீர்வொன்றை முன்வைக்கக் கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் நிறைவடைந்து 15 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வுகள் இன்னும் முன்வைக்கப்படவில்லை.

தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட தரப்பினராகவே நாம் இருந்து வருகின்றோம். இந்நிலையில் இலங்கையின் அபிவிருத்தி குறித்து ஜனாதிபதி பல விடயங்களைக் கூறிவருகின்றார்.

இலங்கையைப் பொறுத்த வரையில் தமிழர்களுக்கான தீர்வினை வழங்காமல் எந்த அபிவிருத்திகளை மேற்கொண்டும் பயனில்லை என்பதை தென்னிலங்கை அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியம் பற்றியும் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் என்று கூறுவது வெறும் கனவு என்பதையும் பெரும்பான்மை அரசியல் தலைவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான கதைகளைக் கூறியும் தமிழ்த் தலைவர்களுக்கு பல சலுகைகளை வழங்கியும் தமிழ் மக்களை ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க வைக்கலாம் என நினைக்கின்றனர்.

வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மதுபான உரிமம் உள்ளிட்ட பல சலுகைகள் கிடைத்துள்ளன.

எனினும், பாரிய குற்றங்களுக்கு பொது மன்னிப்பு வழங்கும் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் எந்த எண்ணமும் இல்லாமல் உள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினரான இரா.சாணக்கியன் மேலும் தெரிவித்தார். (நி-6)






## வீரமாகாளி தாயே நின் பொற்பதங்கள் பிடிப்போம்

**நற்கதி அருள்வாய் அம்மா - தேவி தாயே.**
**பற்பலரும் போற்றும் யாழ் வண்ணார் பண்ணை பதியில்**
**சிற்பம் நிறைந்த உயர் சிங்காரக் கோயில் கொண்ட**
**அருள் மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மா தாயே!**

இன்று அருள்மிகு வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் சாயந்திரம் சித்தாந்த விழுப்பொருள்கள் நிறைந்து விளங்கும், பக்திச்சுவாலை நனி சொட்டச் சொட்டவும் திருமுறைகளையும், திருவாசகங்களையும், திருப்புகழையும், அபிராமி அந்தாதியையும் இனுவில் தமிழ்ச்சங்கம் ஓதுவல்லவர்களுடன் நாமும் ஓதுவோம், கேட்போம், இல்லங்களிலும் ஓதுவோம். தோத்திரங்களை முறையாக ஓதவல்லவர்கள் இம்மை வளங்களையும், மறுமை வாழ்வினையும், அம்மைப் பேரின் பதத்தையும் பெறவல்லவர்கள் என்பது சிவகுருமார்களின் உறுதி மொழியாகும். கசிந்துருகித் தோத்திரம் செய்பவர்கள், சஞ்சிதவினை, பிரார்த்தவினை, ஆகமியவினை மூன்றுவினையும் விலகிச் செல்லும்.

மனிதனுக்கும் சகல ஜீவராசிகளுக்கும் யம தண்டனை பயத்தை விலக்க கதிர்காமப் பெருமானை 430 திருப்புகளில்

**" அரகர சிவாய சம்பு குருபரகுமார நம்பும்**
**அடியர்தமை ஆள வந்த பெருமாளே"**

அரகர, சிவாய, சம்பு, குருபர, குமார நம்பும் அடியார்களை ஆண்டருள வந்த பெருமாளே! எனவும் வேளை கண்டு தடுகிவர வேணும் எந்தன் முனமே தான்

**"ஓம் நமசிவாய"**

**வருபவர் களோலை கொண்டு நமனுடைய தூதரென்று**
**மடிபிடியதாகநின்று-தொடர்பேறு (திருப்புகழ் 430வது)**

ஓம் நமசிவாய!




க.கு.க சிவபாலன் (சி-554)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 445
Viber 076 636 3378



## தெற்கின் மாய வலைக்குள் சிக்குமா
# தமிழினம்?



**“தேர்தல் காலங்களில் தமிழ் மக்கள் மீது கரிசனையுடைவர்கள் போலக் காட்டிக் கொண்டாலும் அதிகாரத்திற்கு வந்தவுடன் கறிவேப்பிலையாய் தமிழ் மக்களைத் தூக்கி எறிவது வழமையாகி விட்டது.”**

நாடு ஒரு தேர்தலைச் சந்திக்க தயாராகி விட்டது. அந்தத் தேர்தல் ஜனாதிபதித் தேர்தலாக இருக்கப் போவது உறுதியாகி விட்டது.

இதைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலும் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பிலும் பல தகவல்கள் எழுந்த வண்ணமுள்ளன.

இந்த நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் ஒரு தாய் வயிற்று மக்கள் என ஆட்சியாளர்கள் அடிக்கடி கூறிக்கொண்டாலும் ஆட்சி அதிகாரங்களை பெரும்பாண்மை சிங்களவர்களே வைத்திருக்கின்றனர்.சிறுபாண்மை இனத்தவர்களிடம் அதிகூடிய அதிகாரங்களைக் கொடுப்பதற்கு ஆட்சியாளர்களும் சரி சிங்கள மக்களும் சரி விரும்பவில்லை.

இதற்கு நாட்டில் நடந்த யுத்தம் ஒரு காரணமாக இருக்கிறது. சிறுபாண்மைத் தமிழ்மக்கள் ஆயுதமேந்தி சிங்கள அரசாங்கத்திற்கு எதிராக போரிட்டவர்கள், அவர்கள் பயங்கவரவாதிகள் என்ற எண்ணம் இப்போதும் அவர்கள் ஆழ்மனங்களில் இளையோடிக் கொண்டுதான் இருக்கிறது.

சிறுபாண்மைத் தமிழ் இளைஞர்கள் சிங்கள ஆட்சியாளர்களுக்கு எதிராக ஏன் ஆயுதம் ஏந்தினர், அவர்கள் ஆயுதமேந்துவதற்கு இங்கு என்ன நடந்தது என்ற கேள்விகளுக்கு விடையைத் தேடினால் அதற்கு அர்த்தமும் பொருளும் கிடைத்துவிடும்.

மாறாக அதைப்புரிந்து கொள்ளாமல் ஒட்டுமொத்த தமிழினத்தையும் பயங்கரவாதிகளாகப் பார்ப்பது ஏற்க முடியாத ஒன்று.

நாட்டில் புரையோடிக்கிடந்த பயங்கரவாதம் அழிக்கபட்டு விட்டது எனக் கூறும் ஆட்சியாளர்கள் சிறுபாண்மைத் தமிழினத்தின் மீதான சீண்டல்களை இன்று வரை கைவிடவில்லை எனின் அவர்களின் சிந்தனை எது என்பது தெளிவாகப் புரிந்து விடும்.

தேர்தல் காலங்களில் தமிழ்மக்கள் மீது கரிசனை கொள்பவர்கள் போல காட்டிக் கொண்டாலும் தமிழினத்தின் நிலை கறிவேப்பிலையின் நிலையே. தமது காரியம் முடிந்தவுடன் கறிவேப்பிலையைத் தூக்கி வீசுவது போல தமிழ்மக்களை வீசிவதும் வழமையாகி விட்டது.

வன்னிப்பெருநிலப்பரப்பில் நடந்த போர்க் குற்ற மீறல்களுக்கு இலங்கை அரசு பொறுப்புக்கூற வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசின் கழுத்தை நெருக்கிப் பிடித்தது.

அப்போது நல்லாட்சிக் காலம், மகிந்தவின் வீழ்ச்சிக்குப் பின்னரான மைத்திரிபால சிறிசேனாவின் ஆட்சிக்காலம்.

சர்வதேசத்தின் கொடும்பிடியை எதிர்கொள்ள அப்போதைய ஆட்சியாளர்கள் திணறினர். என்ன செய்வது என்று மந்திராலோசனை நடத்தி; முடிவில் தமிழ் தரப்பை வைத்து இந்தப் பொறியில் இருந்து மீள்வதற்கு முடிவெடுத்தனர்.

சர்வதேச அரங்கில் நின்று இலங்கை அரசுக்கு பொறுப்புக் கூற கால அவகாசம் வழங்க கோரியது தமிழ்த் தரப்பு. பாதிக்கப்பட்ட தமிழ் இனத்தின் ஏக பிரதிநிதிகளின் கோரிக்கையை ஏற்ற சர்வதேசம் இலங்கை அரசிற்கு கால அவகாசம் வழங்க அனுமதித்தது. அப்போதைய நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தமிழ் தரப்பினைப் பயன்படுத்திக் கொண்ட ஆட்சியாளர்கள் அதன்பின் பொறுப்புக் கூறுவதில் இருந்து விடுபட்டு இறுதி யுத்தத்தில் போர்க்குற்ற மீறல்கள் எதுவும் நடைபெறவில்லை எனவும் நாட்டை மீட் டெடுத்த படையினரைக் காட்டிக் கொடுக்க நாம் தயார் இல்லை என்றும் வெளிப் படையாக அறிக்கையிட்டனர்.

தமிழ் மக்களை ஆட்சியாளர்கள் எவ்வாறு பயன்படுத்தி கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு மேற்குறித்த விடயம் ஒரு சிறு உதாரணம்.

சர்வதேச அரங்கில் இலங்கைக்கு அவகாசம் வழங்கத் தேவையில்லை. நடந்த இன அழிப்புக்கு பொறுப்புக் கூற வேண்டிய கடமை இலங்கை ஆட்சியாளர்களுக்கு உண்டு என அப்போது தமிழ் தரப்பு சர்வதேசத்திடம் கோரிக்கை விடுத்திருக்குமாக இருந்திருந்தால் இன்று தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைத்திருக்கும்.

என்ன செய்வது ஆட்சியாளர்களை நம்பி ஏமாந்த தமிழ் தரப்பு மீண்டும் மீண்டும் ஏமாந்து கொண்டுதானிருக்கிறது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த்தரப்பு பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி எமது பலத்தை சர்வதேசத்திற்குக் காட்டும் சக்தியாக பயன்படுத்தலாம் என்ற பேச்சுக்கள் எழுந்த நிலையில் அது தொடர்பில் பல்வேறு தரப்பினர் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் ஒரு கருத்தை முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்களுக்கு அதிக ஆர்வம் இல்லை எனவும் இந்த ஆர்வம் சிங்கள மக்களுடன் ஒப்பிடுகையில் மிகமிகக் குறைவானதாக இருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் கருத்தில் சில உண்மைகள் உள்ளன என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அதாவது நாம் என்னதான் முயற்சித்தாலும் சிறுபாண்மை இனத்தவர் ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாக வரமுடியாது. இதற்கு சிங்கள மக்கள் ஒரு போதும் அனுமதியார்.

தவிர, பல வாக்குறுதிகளை முன்வைத்து எமது ஆதரவைப் பெற்று வெற்றி பெறும் பெரும்பாண்மை வேட்பாளர் அதிகாரத்திற்கு வந்தவுடன் வாக்குறுதிகளுக்கு எதிர்மாறாக நடந்து கொள்வது வழமை.

இது தமிழ்மக்கள் மத்தியில் ஒருவித வெறுப்புணர்வை ஏற்படுத்திவிட்டது என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றே.

நிலை இதுவாக இருக்கையில் தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை வழங்குவதற்கு நான் தயார் என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின்றார்.

அதாவது இலங்கையின் இறையாண்மையைப் பாதிக்காது தமிழ்மக்கள் விரும்பும் தீர்வை நான் ஜனாதிபதியானால் வழங்குவேன் எனக் கூறியிருக்கிறார்.

இதில் தமிழர் விரும்பும் தீர்வு எதுவென எதிர்கட்சித் தலைவர் வெளியிட்டிருந்தால் மிகச் சிறப்பானதாக இருந்திருக்கும்.

ஆனாலும் குறித்த விடயத்தை வைத்து, தமிழர்களுக்கு தமிழீழத்தை வழங்கப் போகிறார் சஜித் என அவருக்கு எதிராக எதிர்ப் பிரசாரத்தை எதிர்கட்சியினர் தொடங்க வாய்ப்புக்கள் அதிகம்.

எது எவ்வாறாயினும் தமிழ் மக்களுக்கான தீர்வு வெகுவிரைவில் கிடைக்க வேண்டும்.

அந்தத் தீர்வு தமிழினம் தனது பூர்விக பூமியையும் தனது வளங்களையும் கொஞ்சமும் இழக்காமல் கிடைப்பதாய் இருக்க வேண்டும்.

இதைப் பெற்றுத் தர பெரும்பாண்மை ஆட்சியாளர் முன்வந்தால் சிறப்பு. இல்லை எனின் தமிழர் பலத்தை ஒருமித்துக் காட்டும் சக்தியாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழினம் சந்திக்கத் தயாராக வேண்டும்.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** இனிமேல் சவக்காலைகள் மற்றும் மயானங்களிலும் இரவு நேரக் காவலாளிகளை நியமிக்க வேணும் போல.

**சாத்திரியார்:-** என்ன விதானையார் சொல்லுறியள். சொல்லுறதைத் தெளிவாகச் சொல்லுங்க.

**விதானையார்:-** சாத்திரியார் அண்மையில் யாழ்ப்பாணத்தில உள்ள சவக்காலை ஒன்றில இரவு வேளை ஆணும் பெண்ணுமாக இருவர் அங்கிருந்து கதைச்சிருக்கினம்.

மகிழ்வான கதை முரண்பாடாக மாறிய போது,திடீரென அந்த ஆண் பெண்ணின் தலையில் பெற்றோலை ஊற்றி அந்தப் பெண்ணுக்கு நெருப்பு வைத்திருக்கிறான்.பிறகென்ன, சவக்காலையில இருந்து அவலக் குரல் எழும்ப, சனங்கள் எல்லாம் பதறி அடிச்சுக் கொண்டு சவக்காலைக்கு ஓடிப் போனால் அங்க அந்தப் பெண் எரிஞ்சு கொண்டிருக்குது.

உடனடியாகத் தீயை அணைத்து பிரஸ்தாபப் பெண்ணை வைத்தியசாலைக்கு அனுப்பியிருக்கினம். இருந்தும் அந்தப் பெண் இறந்து விட்டார்.

**சாத்திரியார்:-** அப்ப எங்கட சனங்கள் இறந்தவர்கள் உறங்குகின்ற இடங்களையும் நிம்மதியாக விடமாட்டினம் எண்டு சொல்லுறியள்.

**கங்காணி:-** மயானத்தைப் பற்றிக் கதைக்கத்தான் ஞாபகம் வருகுது. அண்மையில ஒரு இறுதிச் சடங்கிற்காக வண்ணார்பண்ணை கோம்பயன் மணல் மயானத்திற்குப் போயிருந்தன்.

அங்க, உடலுக்கு அக்னி மூட்டிய பிறகு, அங்க வேலை செய்யிறவர்கள் பிரேதப் பெட்டிக்குள்ள இருக்கிற வைக்கோலை வெளியில எடுக்கிறதுக்காக, பெட்டியில இருக்கிற துணியை இழுத்துக் கொட்டி வைக்கோலை வெளியால எடுத்தினம். எடுத்தது ஒரு கொஞ்ச வைக்கோல் தான்.

ஆனால் அந்த வைக்கோல் இருந்தால், நெருப் பெரியாமல் கருகும் எண்டு சொல்லி இறந்த உடலைப் போட்டு உருட்டிப் புரட்டி எடுத்ததைப் பார்க்க மிகவும் வேதனையாக இருந்தது.

**பண்டிதர்:-** உண்மை தான், நானும் இதை அவதானித்திருக்கிறன்.

சைவசமயத்தில இறந்தவரின் உடலை அக்கினியில எரியூட்டுவதற்கு முன்னதாக, அபரக்கிரியைகள் செய்து இறந்த உடலை சிவமாக்கி அந்த உடலை அக்கினியில் இட்டு, இறை உலகிற்கு அனுப்பி வைப்பது என்ற அடிப்படையில தான் அத்தனையும் நடக்குது.

ஆனால் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கோம்பயன்மணல் மயானத்தில பெட்டியில இருக்கிற வைக்கோலை வெளியில் எடுக்கிறதுக்காக இறந்த உடலை அங்கும் இங்குமாக உருட்டிப் புரட்டி எடுக்கிற வேலையை இனியாவது மயானத்தில வேலை செய்கிறவர்கள் கைவிட வேணும்.

தேவை எண்டால், பெட்டி தயாரிக்கிறவர்கள் பெட்டிக்குள் வைக்கோல் வைக்கிறதைத் தவிர்க்க வேணும்.இவ்வாறு சாத்திரியார் கூறியதும் ஆலடியில் அமைதி நிலவியது, அமைதியைக் குலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:-** எங்கட தமிழர் பிரதேசத்தில இரண்டு முக்கிய விடயங்களை உடனடியாக உள்ளூராட்சி சபைகள் செய்தாக வேணும்.

**மூப்பர்:-** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:-** ஒரு விடயம், தெருவில் குப்பை போடுவதை முழுமையாகத் தடுக்கிறது.

இரண்டாவது விடயம் தெரு நாய்களை முழுமையாக பிடித்து அவற்றை நாய்கள் காப்பகத்தில விடுகிறது.

இந்த இரண்டு வேலைகளையும் உடனடியாகச் செய்வதற்கு உள்ளூராட்சி சபைகள் விசேட திட்டங்களைத் தீட்ட வேணும்.

**மூப்பர்:-** ஏன் வாத்தியார் வீட்டுக் குப்பை கூழங்களைப் போடுவதற்கு யாழ்.மாநகரசபை குறிப்பிட்ட இடங்களைத் தெரிவு செய்திருக்குது.

இருந்தும் அந்த இடங்களில குப்பைகளைப் போடுவதில் பொது மக்கள் ஆர்வம் காட்டுவதாகத் தெரியல்ல.

**வாத்தியார்:-** மூப்பர் உண்மையில குப்பைகளைக் கொட்டுவதற்கு ஒரு குறிப்பிட்ட இடங்களை யாழ்ப்பாண மாநகர சபை ஒதுக்கியிருப்பது நல்ல விடயம்.

இருந்தும் அந்த இடங்கள் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை.

அவ்வாறு தெரியப்படுத்தப்பட்டிருக்குமாயின், உரப்பைகளில் போட்டுக் கட்டின குப்பைகளை வீதியோரங்களில கொட்டாமல் யாழ். மாநகரசபை ஒதுக்கின இடங்களில சனங்கள் போடுவினம்.


**சிறாப்பர்:-** அது மட்டுமல்ல வாத்தியார். உரிய இடங்களில குப்பைகளைக் கொட்டக் கொண்டு போனால், அங்க கடமையில இருக்கிற தொழிலாளி; குப்பையைத் தரம் பிரிக்க வேணும்.

தரம் பிரிக்காவிட்டால் அந்தக் குப்பையை எடுக்க முடியாது எண்டு கடுப்பாகக் கூறுவதோடு, தன்னைக் கவனிக்குமாறும் கூறுவார்.

இந்தக் கவனிப்பாலதான் சனங்கள் உரிய இடங்களில கொண்டு போய்க் குப்பைகளைக் கொட்டாமல், கண்ட கண்ட இடங்களில குப்பைகளைக் கொட்டி விட்டுப் போகினம்.

**வாத்தியார்:-** அப்ப இது விடயத்தில யாழ்ப்பாண மாநகர நிர்வாகம் நடவடிக்கை எடுப்பதோட, பொது மக்கள் குப்பை போடக் கூடிய இடங்களை அனைவருக்கும் தெரியப்படுத்த வேணும்.

இவ்வாறு வாத்தியார் கூற அதனைத் தானும் வரவேற்பது போல ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## குப்பை கொட்டக்கூடிய இடங்களை பகிரங்கப்படுத்தினால் என்ன?

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாசர் பதில்கள்




கார்த்திகைப்பூ பொறிக்கப்பட்ட காலணி தயாரிப்பு தொடர்பில் தங்க ளின் கருத்து என்ன வியாசரே?

**சஜித் — மாசியப்பிட்டி**

**இந்தியப் பிரதமர் மோடியின் வெற்றி எதைச் சொல்கிறது வியாசரே?**

மோடி எதிர்பார்த்த வெற்றியைப் பெற வில்லை என்பதுடன் கடந்த கால வெற்றி களுடன் ஒப்பிடுகையில் பின்னடைவைச் சந்தித்துள்ளார் என்பது புலப்படுகிறது.
ஆனாலும் இந்தியாவின் பலம்மிக்க தலை வர்களில் ஒருவராய் மோடி உருவெடுத்து விட்டார் என்பதை உலக நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.
தமிழ் நாட்டில் தி.மு.க வெற்றி பெற்றிருந் தாலும் இரண்டாம் நிலையில் பா.ஜ.க இருப்பது பா.ஜ.க வின் பாரிய வளர்ச்சியே.
அண்ணாமலையின் செயற்றிட்டம் தமிழ் நாட்டில் தாமரையை மலர வைப்பதே.
இதை ஓரிரு வருடத்தில் நிறைவேற்றிவிடு வார் போலும்.

**சுதன் — குப்பிளான்**

**தமிழ் அரசியல்வாதிகளிடம்தான் உருட்டுப் பிரட்டு என்றால், அதைவிட மோசமாக அரச அதிகாரிகள் இருக்கி றார்களே?**

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு, நற்பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை என்றொரு சொல்லாடல் உண்டு.
எப்போது சகலரையும் சமனான பார்வையில் பார்க்கின்றனரோ அப்போது தான் தமிழினத் துக்கு விமோசனம் கிடைக்கும்.
பணத்திற்கும்,பதவிக்கும் விலைபோன வர்கள் ஒரு நாளும் ஏழை எளிய மக்களின் வாழ்வை உயர்த்தவோ அவர்களை மதித்து நடக்கவோ முற்படுவதில்லை.
ஆனால் அவர்களின் உழைப்பை சுரண்டு வதில் மிகத் தீவிரம் காட்டுவார்கள்.
இந்த நிலை மாற வேண்டும். அனைவரும் சமம். அனைவருக்கும் ஒரு சட்டம் என்ற சிந்தனை நடைமுறைக்கு வரும்வரை தாழ்ந் தவன் தாழ்ந்தவனாயே இருப்பான்.

**பகவத் — துன்னாலை**

**கோபத்தில் எடுக்கும் முடிவுகள் எதிர் காலத்தைப் பாதிக்குமா வியாசரே?**

நிச்சயம் பாதிக்கும்.கோபம் என்பது மனித வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வரக் கூடியது. இதைப் பலரும் புரிந்து கொள்வ தில்லை.
ஏதோ எடுத்தோம் கவிழ்த்தோம் என்று முடி வெடுத்தால் அந்த முடிவு நிச்சயம் சரியான தாய் இருக்காது.
நாம் ஒரு முடிவை எடுக்கிறோம் என்றால் அந்த முடிவை மனம்,மூளை ஒருமித்து ஒத்துக் கொண்டதாக இருக்க வேண்டும்.
மனமோ அன்றி மூளையோ வேறுபட்டி ருக்கும் போது எடுக்கும் முடிவுகள் நிச்சயம் நரகத்தையே பரிசளிக்கும். எமக்கு சுவர்க்கம் வேண்டுமா? நரகம் வேண்டுமா? என்பதை நாமே தீர்மானிக்க வேண்டும்.





அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**சி.இளங்கோ — மானிப்பாய்**

**பேரினவாதமே கேலி செய்வது கண்டும் எம் பிரதிநிதிகளும் தமிழ் கட்சிகளும் அதிகாரப் பசியைக் கைவிட மாட்டார்களா?**

கேலியும் கிண்டலும் எமக்கு பெரிய பிரச்சினையே இல்லை. தனது சொந்த இனம் வன்னிப் பெருநிலப்பரப்பில் பட்ட பாட்டை மறந்து, இழந்த இழப்பை மறந்து, பட்ட துயரை மறந்து போர்க் குற்ற விசாரணைகள் அனைத்தும் முடிந்துவிட்டன என்று நா கூசாமல் கூறும் அளவில் எம்மவர்கள் இருக்கும் போது கேலியும் கிண்டலும் அவர்களை என்ன செய்துவிடும்.
தமிழினத்திடம் பணிந்து போவது தேர்தலில் வெல்லும் வரைதானே.
வென்றுவிட்டால் அவர்களின் பாதை மாறிவிடும்.
அதன்பின் அவர்கள் தெற்கு அரசியல் பாதையில் தான் செல்வார்கள்.
தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் மீண்டும் வடக்கின் பாதைக்குத் திரும்புவார் கள்.
அரசாங்கத்தை பிரித்து மேய்வார்கள். அதை நம்பிய அப்பாவித் தமிழினம் அவர்களை மீண்டும் பாராளுமன்றம் அனுப்பும்.



இந்தியப் பிரதமர் மோடியின் வெற்றி எதைச் சொல்கிறது வியாசரே?

**கனேஸ் — பருத்தித்துறை**

**கார்த்திகைப்பூ பொறிக்கப்பட்ட காலணி தயாரிப்பு தொடர்பில் தங்களின் கருத்து என்ன வியாசரே?**

கார்த்திகைப் பூ என்பது தமிழினத்தின் வாழ்வின் இன்றியமையாத ஒன்று.
அதன் ஒப்பற்ற புனிதத்தையும் தமிழினம் கார்த்தி கைப் பூவின் மீது வைத்திருக்கும் ஆத்மார்த்த மான தன்மையினையும் உடைத்தெறியும் செயல்களை எவர் செய்தாலும் தமிழினம் பார்த்துக் கொண்டிருக்கமாட்டாது.
புத்த பெருமானின் உருவத்தை பச்சை குத்தி யிருந்தார் என்ற காரணத்திற்காக வெளிநாட்டுப் பெண்ணொருவரை நாட்டுக்குள் அனுமதிக்கா தவர்கள் கார்த்திகைப் பூவினை செருப்பில் பொறி த்ததை எதிர்க்காதது ஏன் என்று புரியவே இல்லை. இதுவும் இன அழிப்பு என்ற செயற் றிட்டத்துக்குள்ளேயே வரும்.

**விஜயதரன் — உரும்பிராய்**

**ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக் கணிக்க வேண்டும் என முன்னணி கோரு வதன் நோக்கம்?**

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்ற அறிவிப்பு வந்தவுடன் பொது வேட்பாளர் என ஒரு சாராரும், அல்ல அது சரிப்படாது என இன்னொரு சாராரும், அல்ல ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என வேறொரு சாரரும் கோரத் தொடங்கிவிட்டனர்.
பாதிக்கப்பட்டது தமிழினம். பாதிக்கப்பட்ட தமிழி னத்துக்கு பெரும்பான்மை ஆட்சியாளர்களால் நீதியைத் தர ஒருநாளும் முடியாது.
அப்படியெனின் ஏன் நாம் அவர்களை ஆதரிக்க வேண்டும். பொது வேட்பாளரை நிறுத்தி தமிழி னத்தின் ஒற்றுமையை சர்வதேசத்திற்குக் காட்டு வோம்.இல்லை எமக்கு ஜனாதிபதித் தேர்தலே வேண்டாம். நாம் அவர்களைப் புறக்கணிப்போம். இக் கோரிக்கைகள் கோரிக்கை வடிவில் வேறு பட்டிருந்தாலும் அதன் பொருள் ஒன்றையே உணர்த்தி நிற்கிறது.

**சி.மகாலட்சுமி — கொக்குவில்**

**பசிவந்தால் பத்தும் பறந்திடும் பணம் வந்திடப் பத்தும் வந்திடுமா வியாசரே?**

பசி வந்தால் பத்தும் பறந்துபோகும் என்பது தவ றானது.பசி வந்தால் பற்றும் பறந்து போகும் என்பதே சரியானது. அதாவது அன்பு, பாசம், உறவு இவை அனைத்தும் பறந்துபோக வயிற்றுப் பசி ஆட்கொண்டு விடும் என்பதே இதன் பொருள்.
பணம் வந்தால், சலரோகம் ,பிரசர், கொலஸ் ரோல், கார்ட் அற்றாக், மூட்டுவலி , முதுகுவலி, முழங்கால்வலி, கற்றாக், முட்டு, மூலம் இந்தப் பத்தும்வந்துவிடும்என்பது நூற்றுக்கு நூறு உண்மை. ஐஸ்கிறீம் கடை வைத்திருப்பவர்கள் கலக்கிய ஐஸ்கிறீமில் ஒரு துளி ருசிபார்த்தாலே போதும் சுகர் 800 ஐத் தாண்டி விடுமாம்.
சாப்பாட்டுக் கடை வைத்திருப்பவர்கள்பலர் ஒரு வாய் சோற்றை அள்ளி வாய்க்குள் வைத்தால் போதும் கதை முடிந்துவிடுமாம். இது தான் மனித வாழ்க்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப் படம்: படகோட்டி
பாடியவர்கள்: பி.சுசிலா, டி.எம்.சௌந்திர ராஜன்
இசை: எம்.எஸ்.வி – டி.கே.ஆர்
வரிகள்: வாலி



தொட்டால் பூ மலரும்
தொடாமல் நான் மலர்ந்தேன்
சுட்டால் பொன் சிவக்கும்
சுடாமல் கண் சிவந்தேன்
தொட்டால் பூ மலரும்
தொடாமல் நான் மலர்ந்தேன்
சுட்டால் பொன் சிவக்கும்
சுடாமல் கண் சிவந்தேன்

கண்கள் படாமல் கைகள் தொடாமல்
காதல் வருவதில்லை
நேரில் வராமல் நெஞ்சைத் தராமல்
ஆசை விடுவதில்லை
ஹோய் ஆசை விடுவதில்லை

தொட்டால் பூ மலரும்
தொடாமல் நான் மலர்ந்தேன்
சுட்டால் பொன் சிவக்கும்
சுடாமல் கண் சிவந்தேன்

இருவர் ஒன்றானால் ஒருவர் என்றானால்
இளமை முடிவதில்லை ஓ.. இளமை முடிவதில்லை
எடுத்துக்கொண்டாலும் கொடுத்துச் சென்றாலும்
பொழுதும் விடிவதில்லை ஓ பொழுதும் விடிவதில்லை

தொட்டால் பூ மலரும்
தொடாமல் நான் மலர்ந்தேன்
சுட்டால் பொன் சிவக்கும்
சுடாமல் கண் சிவந்தேன் ஆ.ஆ.ஆ.ஆ

பக்கம் நில்லாமல் பார்த்து செல்லாமல்
பித்தம் தெளிவதில்லை ஹோய் பித்தம் தெளிவதலில்லை
வெட்கமில்லாமல் வழங்கி செல்லாமல்
சுவர்க்கம் தெரிவதில்லை ஓ சுவர்க்கம் தெரிவதில்லை

தொட்டால் பூ மலரும்
தொடாமல் நான் மலர்ந்தேன்
சுட்டால் பொன் சிவக்கும்
சுடாமல் கண் சிவந்தேன்

பழரசத் தோட்டம் பனிமலர்க் கூட்டம்
பாவை முகமல்லாவா ஹோய் பாவை முகமல்லவா
அழகிய தோள்கள் பழகிய நாட்கள்
ஆயிரம் சுகமல்லவா ஹோய் ஆயிரம் சுகமல்லவா

தொட்டால் பூ மலரும்
தொடாமல் நான் மலர்ந்தேன்
சுட்டால் பொன் சிவக்கும்
சுடாமல் கண் சிவந்தேன் ஆஹா.ஆஹா

# தமிழரின் இருண்ட காலத்தை பேசும் ஊழி

**“ ஈழ நிலத்திலும் உலகத் தரமாக பேசும் கதைகள் உள்ளன என்பதற்கும் இனத்தின் விடுதலைக்கும் உரிமைக்கும் சினிமா என்ற ஆயுதத்தை கையில் ஏந்தலாம் என்பதற்கும் சாட்சியாக அமைந்துள்ளது ஊழி திரைப்படம்.**

2009ஆம் ஆண்டுக்குப்பின்னரான காலத்தில் ஈழத்தமிழ்மக்கள் எதிர்கொள்ளும் இருண்டகாலத்தை பேசுகின்ற திரைப்படமாக இயக்குனர் ரஞ்சித்ஜோசப்பின் ஊழி திரைப்படம் வெளியாகியுள்ளது. 2009 இல் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட சூழலில் இரண்டு நாடுகள் ஒன்றாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட தருணத்தை அறிவிக்கும் நாசரின் கம்பீரக்குரலுடன் படம் தொடங்குகிறது. அதற்குப்பிறகும் தமிழர்கள் மீது நீளும் போரை ஊழி திரைப்படம் தத்துரூபமாகப் பதிவு செய்துள்ளது.

2009 ஈழப்போரின் வீழ்ச்சியைபடத்தின் ஆரம்பத்தில் வரும் இராவணன் கூத்து வெளிப்படுத்தி நிற்கிறது. போரின் வெற்றியுடன் வெருகல் என்ற கிழக்கின் எல்லைக்கிராமத்தில் தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிக்கத் தொடங்குகின்றனர் சிங்களவர்கள். இதனை தட்டிக் கேட்கும் பரமதேவா காணாமல் ஆக்கப்படுகிறார். அவரின் மகனாக சுமார் 13 வயது மதிக்கத்தக்க காசிநாதனின் வாழ்வு காணாமல் ஆக்கப்படுதலுடன் சிதையத் தொடங்குகிறது.

தமிழர் தேசத்தில் உயர்ந்த நிலையில் உள்ள கல்வி எவ்வாறு திட்டமிட்டு சிதைக்கப்படுகிறது என்பதையும் திறந்து விடப்பட்ட போதையின் பாவனை எவ்வாறு ஒரு இளைஞனின் வாழ்வை பலிகொள்ளுகிறது என்பதனையும் காணாமல் ஆக்கப்படுதல் எவ்வாறு அவர்தம் குடும்பத்தை சிதைத்துச் செல்கிறது என்பதையும் ஊழி கதைக்களமாக கொண்டுள்ளது. அத்துடன் தமிழர் நிலத்தில் எப்படி எல்லாம் ஊழியின் கொடும் கரங்கள் ஆக்கிரமிப்பை அழிவை மேற்கொள்ளுகிறது என்பதையும் படம் விரிவாகப் பேசுகிறது.

சினம் கொள் திரைப்படத்தை இயக்கிய ரஞ்சித் ஜோசப் இந்தத் திரைப்படத்தை இயக்கியுள்ளார். ஈழக் கதையை உலகத்தரமாக சொல்லும் திரைக் கதையின் உத்தி இந்தப்படத்தின் பெரும்பலம். ஒரு கதாபாத்திரத்தின் வாழ்வின் சித்திரத்தை நான்கு வேறுபட்ட பருவங்களில் இருந்து கதை சொல்வதும் நான்கு மாறுபட்ட நிலங்களில் இருந்து கதைசொல்வதும் ஊழி திரைப்படத்தின் புதிய உத்தியமாக தரம் பெறுகிறது.

திரைப்படத்தின் மண்ணினதும் காலத்தினதும் துயரமும் நெருக்கடியும் மாறாத வசனங்களையும் செமையான பாடல்களையும் ஈழத்து கவிஞர் தீபச்செல்வன் எழுதியுள்ளார். படத்தின் பாடல்கள் இந்தியபடப் பாடல்களை விஞ்சி காதலின் சுவையை ஊட்டுகிறது. படத்தில் இந்திய ஒளிப்பதிவாளர் ராஜேஸ் வர்மாவின் கமரா ஈழ மண்ணின் இருளையும் ஒளியையும் நிலத்தையும் திரையில் அழகாக காட்டியுள்ளது. அத்துடன் படத்தின் பின்னணி இசையாலும் பாடல்களின் இசையாலும் படத்திற்கு அழகையும் விறுவிறுப்பையும் கூட்டியுள்ளார் இந்திய இசையமைப்பாளர் என்.ஆர்.ரகுநந்தன்.

திரைப்படத்தில் நாயகனாக ஆகாஷ்தியாக லிங்கமும் நாயகியாக விபூர்சனாவும் (யாழ் பல்கலைக்கழக ஊடகத்துறை மாணவி) மிக நேர்த்தியாக நடித்துள்ளனர். அத்துடன் சட்டத்தரணி சுகாஷ் இப்படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடித்துள்ளார். அத்துடன் வனிதா, ஜெசி, அகிலன், ஜீவா (ஊடகவியலாளர்) கவிஞர் தீபச்செல்வன், சதுர்ஜன், வஜிவரன், ஆசிரியர் சத்தியானந்தன் உள்ளிட்ட பலரும் படத்தில் இயல்பான நடிப்பின் ஊடாக கவனத்தை ஈர்த்துள்ளனர்.

ஈழநிலத்திலும் உலகத் தரமாக பேசும் கதைகள் உள்ளன என்பதற்கும் இனத்தின் விடுதலைக்கும் உரிமைக்கும் சினிமா என்ற ஆயுதத்தை கையில் ஏந்தலாம் என்பதற்கும் சாட்சியாக அமைந்துள்ள ஊழி திரைப்படம், ஈழசினிமாவின் மைக்கல்.


ஊழி - இருண்ட காலத்தின் சில கசப்பான பக்கங்கள்.

**கி.அலெக்ஸன்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் கோடீஸ்வரராகலாம்



நம்மில் பலருக்கு நல்ல சம்பளம் / வருமானம் இருந்தாலும் பணக்காரர் ஆகாமல் ஏழையாகவே இருந்து வருகிறார்கள். இதற்குக் காரணம் அவர்களிடம் இருக்கும் பல மோசமான பழக்கங்கள் ஆகும். எந்தெந்தப் பழக்கவழக்கங்கள் எல்லாம் ஒருவரைக் கோடீஸ்வரர் ஆகவிடாமல் தடுக்கின்றன எனப் பார்ப்போம்.

**அதிகமாக காபி குடிக்கும் பழக்கம்**

சிலருக்கு ஒரு நாளில் 5, 6 முறை காபி/தேநீர் குடிக்கும் பழக்கம் இருக்கிறது. இந்தப் பழக்கம் புத்துணர்வை அளிப்பது போல் தோன்றினாலும் உண்மையில் அந்த வேலையை அது செய்யவில்லை. காரணம், இந்தப் பழக்கம் இல்லாதவர்கள் தங்கள் தினசரி வாழ்க்கையில் சுறுசுறுப்பாக இயங்குவதைப் பார்க்கமுடிகிறது.

ஒரு நாளைக்கு காலை, மாலை என இருவேளை இது போன்ற பானங்களை அருந்துவதில் தவறில்லை. அதிக எண்ணிக்கையில் காபி, தேநீர் பானங்களைக் குடிப்பது தேவையற்ற செலவுகளை ஏற்படுத்தும். ஒரு நாளைக்கு இரு முறை தேநீர் குடித்துவிட்டு, மூன்று முறை தவிர்ப்பதாக வைத்துக்கொண்டால், ஒரு தேநீர் ரூ.15 எனில், ஒரு நாளைக்கு ரூ.45 உம் ஒரு மாதத்திற்கு ரூ.1,350 உம் மிச்சமாகும்.

**மது குடிக்கும் பழக்கம்**

சமூக அந்தஸ்து புத்துணர்ச்சி, சந்தோஷம் எனப் பல காரணங்களை சொல்லி சிலர் வார விடுமுறை நாட்களில் மது அருந்துகிறார்கள். வாரம் சுமார் ரூ.1000 செலவானால் கூட அது நீண்ட காலத்தில் பெருந்தொகையாக இருக்கும். மேலும் மது அருந்துவது உடல் நலனுக்குக் கேடு ஆகும்

**தினமும் வெளியில் சாப்பிடுவது**

சிலர் தினமும் ஒரு வேளையாவது வெளியில் சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். பலரும் மதியம் வெளியில் சாப்பிடுகிறார்கள். சிலர் இரவு வேலை முடிந்து வீட்டுக்குச் செல்லும்போது வெளியில் சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

கூடிய வரையில் வெளியில் அடிக்கடி சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. ஒரு வேளை வெளியே சாப்பிடுவதால், சுமார் ரூ.300 செலவானால்கூட மாதம்தோறும் குறைந்தது ரூ.9,000 செலவாகும். இதைக் கூடிய வரையில் குறைத்துக் கொள்வது நல்லது.

**புகை பிடிக்கும் பழக்கம்**

இந்தப் பழக்கம் பர்ஸைப் பதம் பார்ப்பதுடன் உடல் நலத்தையும் வெகுவாக பாதிக்கும். மேலும், சுற்றுச்சூழலையும் பாதிக்கிறது. ஒருவர் ஒரு நாளைக்கு ஐந்து வேளை சிகரெட் பிடிக்கிறார். ஒரு சிகரெட் விலை ரூ.100 எனில், அதற்கு ரூ.500 செலவாகிறது.

**கடைகளில் தண்ணீர் போத்தல் வாங்குவது**

சிலர் வீட்டை விட்டு வெளியே வரும் போது கையை வீசிக்கொண்டு எதையும் எடுக்காமல் செல்கிறார்கள். தண்ணீர் தாகம் எடுத்தால், தண்ணீர் போத்தலைப் பணம் தந்து வாங்குகிறார்கள். ஒரு போத்தல் ரூ.150 எனில் ஒரு நாளைக்கு 2 போத்தல் எனில், ஒரு மாதத்துக்கு சுமார் ரூ.9,000 செலவாகும். இதே வீட்டிலிருந்து வெளியே வரும்போது தண்ணீர் போத்தலை கையோடு எடுத்து வந்தால், இந்தப் பணத்தை மிச்சப்படுத்த முடியும்.

**தேவை இல்லாத வாகனப் பயணங்கள்**

வீட்டு வாசலைத் தாண்டி வெளியே கால் வைத்தாலே ஆட்டோவைப் பயன்படுத்த நினைக்கிறார்கள் பலர். அதிக பஸ், ரயில் போக்குவரத்து வசதி வாய்ப்புகள் உள்ள இடங்களுக்கு செல்லக்கூட நம்மவர்கள் காரை வாடகைக்கு எடுக்கப் பழகி இருக்கிறார்கள்.

**பார்த்ததை எல்லாம் வாங்கும் பழக்கம்**

நம்மில் பலரிடம் இருக்கும் கெட்ட பழக்கம், பார்த்ததை எல்லாம் வாங்க நினைப்பது. இது ஒரு வகை மனக் குறைபாடாகவே தற்போது பார்க்கப்படுகிறது.

இந்த ஷாப்பிங் பழக்கத்தை இனியும் தொடரக் கூடாது என்பதை ஒருவர் புரிந்துகொண்டு செயற்படத் தொடங்கினால், மாதம்தோறும் பல லட்சம் வரை மிச்சமாகும்.

**மிச்சமாகும் கோடிகள்...**

25 வயதுள்ள ஒருவர் இந்த கெட்ட பழக்கங்களை தவிர்ப்பதன் மூலம் மாதம் தோறும் தாராளமாக மிச்சப்படுத்த முடியும்.

தேவையில்லாமல் பணத்தை வீணாக்கும் பழக்கவழக்கங்களை ஒருவர் முழுவதுமாகக் கைவிட்டால் பல கோடிகளை அவரால் சேர்க்க முடியும். முடிந்த அளவுக்கு அவற்றைக் குறைத்துக்கொண்டால், சில கோடிகளையாவது சேர்க்க முடியும்!

பழமொழிகள் தமிழர்களின் வாழ்வோடு கலந்தவை. இடம், பொருள், காலத்துக்கு ஏற்ப அவற்றைப் பயன்படுத்துவதில் கில்லாடிகள் நம் மக்கள். 'இதற்கு இந்த அர்த்தமில்லை. இப்படி...' என்று வாதிடுபவர்களும் உண்டு.

'ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது' என்பதை எடுத்துக்கொள்வோமே... இதன் பொருளை இப்படிச் சொல்லலாம், ஒருவர் சட்டப் படிப்பு படித்திருந்தாலும், உரிய முறையில் வாதாடக் கற்றுக்கொண்டு, நீதிமன்றத்தில் தன் திறமையை நிரூபித்தால்தான் அவர் வழக்கறிஞர். என்னதான் படித்து அறிவைப் பெற்றிருந்தாலும், அதை நடைமுறைப்படுத்துவதற்கு அனுபவமும் திறமையும் அவசியம்.

"தப்பு... 'எட்டிச் சுரக்காய் கறிக்கு உதவாது' என்பது தான் உண்மையான அர்த்தம். எட்டிதான் 'ஏட்டு' ஆகிவிட்டது. எட்டிக்காய் ரொம்பக் கசக்கும். அதைக் கறியாக்க முடியாது என்றுதான் அப்பிடிச் சொன்னார்கள்' என்பவர்களும் உண்டு."

இரு நண்பர்கள் வனச் சுற்றுலாவுக்குப் போனார்கள். அவர்களில் ஒருவர் மெத்தப் படித்த மேதை. இன்னொருவர் அதிகம் படிப்பு வாசனை இல்லாதவர். இரவானது. ஒரு கூடாரம் அமைத்தார்கள். உணவுக்குப் பிறகு சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். படுத்தார்கள். தூங்கிப் போனார்கள். நள்ளிரவு தாண்டியிருக்கும். நண்பர், அதிகம் படித்த மேதையைத் தட்டி எழுப்பினார்.


"நண்பா, வானத்தைப் பார். என்ன தெரியுது?"

"ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள்!" "அதெல்லாம் உனக்கு என்ன சொல்லுது?"

"வான சாஸ்திரப்படி சொல்லவேண்டும் என்றால் இந்தப் பிரபஞ்சத்தில் ஆயிரக்கணக்கான பால்வீதிகள் இருக்கு, நிறைய கோள்கள் இருக்கு. ஜோதிடப்படி சொல்லவேண்டும் என்றால் சிம்மத்தில் சனி இருக்கார். இப்போது மணி இரண்டரை இருக்கும். நமது சமய நிலைப்படி சொல்ல வேண்டும் என்றால் இறைவன் மிகப் பெரியவர். நாமல்லாம் அவருக்கு முன்னால் ஒண்ணுமே இல்லை. வானிலை ஆய்வுப்படி சொல்ல வேண்டும் என்றால் நாளைக்கு ஓர் அழகான நாளாக இருக்கும்... இப்பிடியெல்லாம் நட்சத்திரங்கள் சொல்கிறது. உனக்கு என்ன தோன்று கிறது.?"


"அட முட்டாளே... நம்ம கூடாரத்தை எவனோ திருடிட்டுப் போயிட்டாண்டா."

# ஏட்டுச்சுரக்காய் என்ன செய்யும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையக பூமியிலே



அவத்தின் அடிமைகளாய்
அலைகின்றோம் நாம் இங்கே
மரணத்தின் வலியுணர்ந்த வாழ்வினிலே
வரம் தேடி வாழ்கின்ற வாழ்க்கையிலே

கனத்த இதயத்தோடு
கண்ணீரால் நனைகின்றோம்
காலத்தை நொந்து நாமும்
கவலைதனை சுமக்கின்றோம்

ஆனாலும் வாழ்கின்றோம்
ஆனது ஒன்றுமில்லை
அசைபோட்டு அமர்கின்றோம்
அவலத்தை கவனமாக்கி
ஆளுகொரு கவனம் கொடுத்து
அகமகிழ்வு கொள்கின்றோம்
அன்றாட வாழ்க்கையிலே நாம் இங்கே

என்னில் அடங்காத ஏக்கங்கள்
சொல்லி அடங்காத சோகங்கள்
பின்னி பிணைந்திட்ட வாழ்வினிலே
பிணமாகத் திரிகின்றோம் மலையக
பூமியெங்கும்

**பி.துயரசனி,**
**ஒட்டுசுட்டான்.**

## வாழ்க்கையின் ஏணிப்படி

இருப்பிடம் தேடி
அலைந்திருந்தேன்
உதரத்தில் எனக்கு
இடம் கொடுத்தாய்
கருக்களில் நானும்
விழிக்கும் முன்னே
கனவுகள் எனக்காய்
நீ வடித்தாய்
வலிகளை எனக்காய்
நீ சுமந்தாய்
விழிகளில்
கண்ணீரைத் துடைத்தாய்
படுக்கையில்
உறக்கம் கொடுத்தாய்
பருவங்கள் அனைத்திலும்
நீ இருந்தாய்
வாழ்க்கை முழுவதும்
எனக்கே கொடுத்தாய்
என் வாழ்த்துக்கள்
அனைத்தையும்
உனக்கே தருகின்றேன்

**அருளன்பு ஞானப்பிரகாசம்,**
**ஊர்காவற்றுறை.**

## கரையாத கனவுகள்

திசையறியாது நின்றோம்
திணறிடும் அவலம் கொண்டோம்
அலைகரை எச்சமாகி
அரை உறவாகி நின்றோம்
தலைமுறை மருவக் கண்டோம்
தரணி வாழ் ஒழியக்கண்டோம்
முலையுடன் தாயும் சேயும்
முதுமையும் இளமை எல்லாம்
முகவரி அற்றுப்போக
மும்முனை அதிரக் கண்டோம்
செம்பிளை ஒளியைப்போலே
செந்தமிழ் அனலைக் கண்டோம்
அந்தியே அற்ற வாழ்வு
அகிலத்தில் புதுமை கண்டோம்
பிந்தியோ முந்தியோ
உயிர் பிரிவது உறுதியானோம்
வல்லவன் வருவானென்று
வழிதொடு வானைப் பார்த்தோம்
சொல்லது பொய்த்துப் போக
சோதர துரோகமானோம்
அல்லலால் பட்ட வாழ்வு
அகலிகை நெஞ்சம் கண்டோம்
இப்போ ஆகுதி உயிர்களானோம்



**யாழ் வாகீஷ்**

## மௌனத்தின் தேடல்- 719



## 'கலப்படம்'

பசிக் கொடுமையால்
பச்சத் தண்ணி
குடிப்போமென்றால்
கொட்டிய குளோரினால்
என் குடல் அரிக்கப் போகிறது
இதிலும் கலப்படமா?

**துணவியூர் நடா.**

## தேசமும் தேகமும்

நீயின்றி நானில்லையென்று
சொல்வது
தீ போன்ற காதலை வெல்வதற்கு
நீரின்றி நாமில்லை என்று
முன்மையை
நீர்த் தினமுமென்றும்
உலகிற்கு உணர்த்தும்
இங்கும் இரு கைகளாலும்
நீரைப் பருகுவது
பெரும் பசியையும் போக்குமென்று
இதைக் கவனிப்பாரில்லையாயென்று
விழித்துக் கண்களும் கவிதை பாடும்
இது கண் காணாத் தேசமாகையால்
எது நடந்தாலும்
உற்றுக் கவனிப்பதில்லை

**க.நாகராசா,**
**நுணாவில்.**

## மௌனத்தின் தேடல்- 720



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## கரங்களில் ஏந்தினேன்

வெட்டிப் பார்க்க முடியாத உன்னை
தொட்டுப் பார்க்க விரும்புகிறேன்
கட்டுப்பட்ட என் கைகளை-நீ
தட்டித் தவழுகிறாய் என் தாகம் தீர்த்து

**யா/ஊர்காவற்றுறை றோ.க.த**
**ஆண்கள் பாடசாலை.**

## இயற்கையை நேசி

தாகமெடுக்கிறதா?
குடி உன் தாகம் தீரும்வரை
குடித்து முடி,
உனக்கு இன்று கிடைக்கும் நீர்
நாளை உன் பிள்ளைக்கு
கிடைக்காது போகும்
ஆதலால், காத்திடுவோம் இயற்கையை
அதுவே இந்த உலகை வாழ வைக்கும்

**காவியன், இணுவில்.**

## நீரின் தேவை

இந்த உலகம் இயங்க நீர் தேவை!
மண்ணில் விதை முளைத்தெழ
நீர் தேவை!
மனிதனின் பசி தீர நீர் தேவை!
உயிர்கள் வாழ்வதற்கு மட்டுமல்ல
உயிர்கள் உருவாக்கத்திற்கே
நீர் தேவை
இந்த நீரை மனிதன் காக்க வேண்டும்
இல்லையேல் உலகம் அழிவது
உறுதி

**[illegible] யாழ்ப்பாணம்.**

## தண்ணீர்த் தாகம்

தாய்ப் பசுவைக் கண்ட கன்றுக்குட்டி துள்ளிக் குதித்தோடி
தாவிப்போய் அதன் மடியில் முட்டி மோதி
வாலைக் குடிப்பதுபோர்
வெயிலின் வெம்மையால் தண்ணீர் தேடித் தவித்த நீயும்
தண்ணீர்க் குழாயில் வழிந்த நீரை இரு கைகளிலுமேந்தி
ஆசை தீர அள்ளிப் பருகி உன் தணியாத தாகத்தை
தணித்துக் கொண்டாயே தம்பி

**சி. மகாலட்சுமி, கொக்குவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை


முற்றுகை தொடங்கி 107 நாட்கள் கோட்டைக்குள் இருந்த உணவுப் பொருட்கள் அனைத்தும் தீர்ந்துவிட்டன. கோட்டைக்குள் இருந்த நாய்களும் பூனைகளும் அங்கிருந்தோரின் ஆகாரங்கள் ஆகின.

போர்த்துக்கேயர் கோட்டைக்குள் இருந்த பூனைகளைத் துரத்தியதால் அவை தறிகெட்டு ஓடி கோட்டை மதிலைக் கடந்து அகழியினுள் பரிதாபமாக விழுந்தன. பூனையை இழந்த போர்த்துக்கேய வீரன் பரிதாபமாக திரும்ப நேர்ந்தது. இனியும் பொறுக்க முடியாது என்ற நிலை கோட்டைக்குள் உருவானது.

யாழ்ப்பாண கோட்டையின் கிழக்குப் பக்க உயர் கொத்தளத்தில் இருந்து முதலாவது பீரங்கி ஒல்லாந்த படைவீரர்களை நோக்கி வெடித்தது.அதனைத் தொடர்ந்து வடக்கு பக்க கொத்தளத்தில் இருந்து பீரங்கிகள் முழுங்கின. அகழியைத் தாண்டி பீரங்கிக் குண்டுகள் தீச்சுவாலையுடன் ஒல்லாந்தரை நோக்கிப் பாய்ந்தன. ஒல்லாந்த கொமுசாறி கோட்டையைத் தாக்குமாறு தனது படை வீரர்களுக்கு உத்தரவிட்டார். ஒல்லாந்தர்களின் பீரங்கிகள் முழக்கமிட்டன. வடக்கிலிருந்து பாய்ந்த முதற் குண்டே வடபுறக் கொத்தளத்தைச் சிதைத்தது. தொடர்ந்து மழை போல பீரங்கிக் குண்டுகள் பாய்ந்தன. கடனீரேரியில் தங்கி நின்ற நார்டொன் கப்பலில் இருந்து பாய்ந்த பீரங்கிக் குண்டு தென்புற அரண் சுவரினை துளையிட முயன்றது.

ஒல்லாந்தரின் எறிபொறிகள் பெருங்கற்களையும் தீப்பந்தங்களையும் கோட்டைக்குள் வீசி எறிந்தன. கோட்டைக்குள் கூக்குரல்கள் எழுந்தன. யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பீரங்கிக் குண்டுகள் முற்றாக செலவாகி விட்டன.

போர்த்துக்கேயர் இடுகாட்டில் புதைகுழிகளுக்கு மேலிருந்த கல்வெட்டு சிலைகளை உடைத்தும் கோயில்களில் இருந்த வெண்கலப் பாத்திரங்களை




பொடி செய்தும் பீரங்கிகளில் போட்டு குண்டுகளாக உபயோகித்தனர்

**ஹைக்லோப் வன் ஹூன்ஸ்**

யாழ்ப்பாணம் கோட்டைக்குள் இருந்த போர்த்துக்கேயர் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தனர். கோட்டைக் கதவுகள் திறக்கப்பட்டன. போர்த்துக்கேயரின் கொடி இறக்கப்பட்டு ஒல்லாந்தரின் கொடி கோட்டையில் ஏற்றப்பட்டது. கோட்டையில் இருந்து வெளியேறுவோர் அணிந்திருந்த உடைகளை மட்டுமன்றி வேறெதையும் எடுத்துச் செல்லக் கூடாது என கொமுசாறி வன் ஹூன்ஸ் கட்டளையிட்டிருந்தான். கோட்டையிலிருந்து வெளியேறிய ஆண், பெண் அனைவரும் நிர்வாணமாக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டனர். ஈவிரக்கமின்றி அவமானகரமான இச் செயலை ஒல்லாந்தர் செய்தனர்.

---

# கடல் புறா




அக்ஷயமுனை நகரத்தின் மற்றக் கட்ட டங்களைவிடச் சற்று உயரத்திலிருந்ததன் காரணமாக அந்த ஒற்றை அடுக்கு மாளிகையின் கீழ்த்தளத்திலிருந்தே ஊரின் அமைப்பு கண்ணுக்கு நன்றாகத் தெரிந்ததென்றால் மேல்தளத்தின் அறையிலிருந்து ஊர் மட்டுமின்றி ஊருக்குப் பின்புறமிருந்த பகிட் பாரிஸான் மலைத்தொடரும் முன்புறமிருந்த கடற்பகுதியும்கூட மிகத் தெளிவாகத் தெரிந்தன.

அந்த மாளிகை பார்ப்பதற்கு ஒற்றையடுக்கு மாளிகையே தவிர, மேல்தளத்தில் ஒரே ஒரு விசாலமான அறை மட்டுமே நடுவில் இருந்தது. அதைச் சுற்றிலும் பெரும் தாழ்வறைகள் இருந்தனவேயொழிய, வேறு அறைகள் ஏதுமே இல்லை. தவிர, அந்த ஓர் அறையிலும் பலவர்மன் என்றும் தங்கியதில்லையென்பதற்கான அடையாளங்களும் இருந்தன. இளைய பல்லவன் முதலில் அதைப் பார்வையிட்டபோது சுவர்களின் அலங்காரத்துக்கான வசதிகளோ, மஞ்சங்களைத் தரையில் பொருத்துவதற்கான ஏற்பாடுகளோ பெரும் சர விளக்குகளைக் கூரையிலிருந்து தொங்கவிடுவதற்கான அமைப்புகளோ ஏதுமில்லாததைக் கவனித்த இளையபல்லவன், கோட்டைத் தலைவன் என்றும் அந்த அறையில் தங்கியதில்லை யென்பதைப் புரிந்துகொண்டான். தவிர, அந்த அறைச் சுவர்களில் பொருத்தப் பட்டிருந்த மர ஆணிகளிலிருந்த இரண்டொரு வாள்கள், ஈட்டிகள் முதலியனவும் அறைக்கு வெளியே இருந்த இரும்பு வளையங்களில் பொருத்தப்பட்டிருந்த தீப்பந்தங்களும் அது காவல் வீரர் அறையாக இருக்க வேண்டும் என்பதையே வலியுறுத்தின. மற்றபடி அறை விசாலமானதாயும் அக்ஷயமுனைக் கோட்டை முழுவதையும் கண்வீச்சால் அளந்து விடக்கூடிய முறையிலும் அமைந்திருந்ததால் இத்தகைய இடத்தைப் பலவர்மன் தனக்குச் சொந்தமாக ஏன் வைத்துக் கொள்ளவில்லையென்பதை எண்ணிப் பார்த்த இளைய பல்லவனுக்கு விடையேதும் விளங்கவில்லையென்றாலும், அதற்குத் தக்க காரணமிருக்குமென்பதில் மட்டும் அவனுக்குச் சந்தேகமில்லை. இருப்பினும் அந்த அறையே தனக்கு வாசஸ்தலமாக இருப்பதற்குத் தகுதியுள்ளது என்பதை முடிவு செய்தான் படைத்தலைவன். அதனுடைய விசாலம், கடலை நோக்கியும் மலையை நோக்கியும் எதிரும் புதிருமாக இருந்த இரண்டு வாயில்கள், சுற்றிலுமிருந்த தாழ்வறைகள் எல்லாமே அவனுக்குப் பெரும் வசதியாயிருந்தன. அந்த அறையின் நடுவிலிருந்து பகிட்பாரிஸான் மலைக் காட்டுப் பகுதியையும், கொள்ளையர் இருந்த கடற்பகுதியையும், ஒரே காலத்தில் கவனிக்கலாமாகையால்

## நிதிப் பெட்டியா? சதிப்பெட்டியா?

அந்த அறையின் நட்டநடுவில் தனது மஞ்சத்தை அமைக்க மாளிகை வீரர்களுக்குக் கட்டளையிட்டான் படைத் தலைவன். தனது இருப்பிடத்துக்கு ஏற்பாடு செய்துகொண்டு பலவர்மன் அனுமதி பெற்றுப் பொக்கிஷ அறை மேற்பார்வைக்கும் சேந்தனை நியமித்த இளையபல்லவன் அந்த நாள் முழுவதும் அமீருடனும் மற்ற இரு உப தலைவர்களுடனும் அந்த நகரத்தைச் சுற்றிச் சுற்றி நகரத்தின அமைப்பு நுட்பங்களை ஆராய்ந்தான். நகரம் அதிகப் பெரிதாயில்லாமல் கால்காதச் சுற்றளவேயுடையதாயிருந்ததையும், நகரப் பாதைகள் விசாலமாகவும், ஆயுத வண்டிகள் போவதற்கு வசதியாகவும் அமைக்கப்பட்டிருந்ததையும், எல்லாப் பாதைகளும் திரும்பத் திரும்ப கோட்டைத்தலைவன் மாளிகையில் வந்து முடிவதையும் கண்டான் படைத்தலைவன் நகரத்துக்கு மொத்தம் மூன்று வாயில்களே இருந்ததை முன்பே அறிந்திருந்த படைத் தலைவன் அந்த மூன்று வாயில்களில் கடற்கரையை நோக்கியிருந்த முதல் வாயிலைத் தான் வந்த அன்றே பார்த்திருந்தாலும் மற்ற வாயில்களைப் பார்க்கவில்லை யாகையால் நகரத்துக்குக் கிழக்கிலும் மேற்கிலும் இருந்த அந்த வாயில்களின் பலத்தையும் சோதித்தான். கடற்கரை வாயிலைப் போலவே அந்த இரண்டு வாயில்களும் பலமாக இருந்ததாலும் அவற்றின் பெரும் கதவுகளில் செருகப்பட்டு வெளி நோக்கிக் கூறிடப்பட்டிருந்த இரும்பு ஆணிகளைப் பெரும் மரத் துண்டுகளைக் கொண்டும் இடித்துத் தகர்ப்பது சாத்தியமில்லை யென்பதையும் புரிந்து கொண்டான் இளையபல்லவன். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

403

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## Stress அவசியமான ஒன்று



நீங்கள் வாழ்க்கையில் அறிந்தோ, அறியாமலோ அதனை அனுபவித்திருப்பீர்கள். Stress என்பது நீங்கள் ஒரு சவாலான மாற்றத்துக்கு வெளிக் காட்டப்படும் போது உடலில் இயற்கையாகவே நிகழும். உங்களை உயர்நிலையில் தயார்ப்படுத்துவதற்கான நிலைமையே ஆகும். அந்த மாற்றம் நெருக்கமான ஒருவரின் மரணச் செய்தியாகவோ அல்லது உங்களை ஓர் எதிரி தாக்க வரும் சூழலாகவோ இருக்க முடியும்.

stress அவசியமான ஒன்று. பின் அது ஏன் பாதிப்பானதாக மாறுகின்றது?

ஏதாவதொருstress அழுத்தத்தை ஏற்படுத்தும் மாற்றங்களுக்கு முகம் கொடுக்கையில் நீங்கள் stress இற்கு உள்ளாகின்றீர்கள். அந்த நிலைமையில் உடலில் வெளிப்படும் hormones மூளை, தசைக்கான குருதிப் பாய்ச்சல், சுவாச வீதம், தசைத்தொழிற்பாடு என்பவற்றை மிகைப்படுத்துகின்றன. அவை உங்களிடம் சடுதியான செயற்றிறன் அதிகரிப்பையும் சக்தி வெளிப்படுகையையும் நிகழச் செய்கின்றன. stress இனை ஏற்படுத்திய காரணி ஓர் ஆபத்தான எதிரி எனில் நீங்கள் எதிரியை தாக்கியோ அல்லது மிக விரைவாகத் தப்பியோடியோ உங்களை காத்துக் கொள்ளமுடியும்.

அது ஒரு விளையாட்டுப் போட்டி எனில் அதனைப் பயன்படுத்தி வெற்றியை பெற்றுக்கொள்ளலாம். அல்லது stress இனால் பதற்ற முற்றுத் தோல்வியைத் தழுவிக் கொள்ள நேரிடலாம். நேரிடையான, ஆரோக்கியமான விளைவுகளையும் எதிரிடையான ஆரோக்கியமற்ற விளைவுகளையும் ஏற்படுத்தலாம். எவ்வாறான விளைவு என்பதை அதைக் கையாளும் உங்களின் மனநிலை, பரம்பரைப் பின்னணி என்பன தீர்மானிக்கின்றன.

வழமையில் அருட்டப்பட்ட உடலியல் மாற்றங்கள் சவாலான சூழலைக் கடந்தபின் சாதாரணமான நிலைக்குத் திரும்புகின்றன. பொதுவாக எதிரிடையான ஆரோக்கியமற்ற விளைவுகள், வெற்றி கொள்ளப்பட முடியாத சூழல்கள் அருட்டப்பட்ட நிலைமையை நாட்கணக்கிலோ அல்லது வார, மாதக்கணக்கிலோ நீடிக்கச் செய்கின்றன. அவ்வாறு வழமைக்குத் திரும்பு வதில் ஏற்படும் தாமதம் சாதாரண உடல், உளத் தொழிலியலைப் பாதிப்பதுடன் சில நோய் நிலைமைகளைத் (உயர் குருதி அமுக்கம், ஆஸ்துமா, வயிற்றுக் கோளாறு வயிற்றுப்புண்) தீவிரபடுத்தி விடுவதுடன், புதிதாக உளவியல் நோய் நிலைமைகளை உருவாக்க முனைகின்றது.

### எதிரிடையான stress இன் விளைவுகள்

அவை உங்களுடைய உடலில், உணர்வில், நடத்தையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்திவிடுகின்றன.

உடலில் மாற்றங்கள், உணர்வில், நடத்தையில் தலைவலி, மனவிசாரம், மேலதிக உணவு, இடுப்பு வலி, ஓய்வறு நிலை, குறை உணவு, நெஞ்சு வலி, கவலை மதுபோதைப் பாவனை, இதய நோய்கள், மன உளைச்சல், அதிகாலை உறக்கக்கலைவு படபடப்பு, கோபம், புகைப்பிடித்தல், உயர்குருதி அமுக்கம், கவனக் குறைவு, ஒதுங்கியிருத்தல், நீர்ப்பீடன வீழ்ச்சி, மறதி, அனுதாபப் பேச்சு, வயிற்றுக் கோளாறு தனிமை, உறவு முரண்பாடு இவ்வாறான இயல்புகளின் நீடிப்பு உடலின் உயர்செயற்றிறன், நோயெதிர்ப்பு திறன் என்பவற்றைக் குறைத்து நோய்க்குள்ளாகும் தன்மை, ஆயுள் வீழ்ச்சி என்பவற்றை ஏற்படுத்தி விடுகின்றன.

### Stress இனைக் கையாளுதல்

கையாளுதலின் முன் stress இன்னை இனங்காணுதல் தேவையானது. நீங்கள் stress இனை உணரும் போது உங்களையே சில கேள்விகள் கேட்டு stress இனைப் பற்றி விழிப்புறுக் கொள்ளுங்கள்.

❖ நான் இப்போது எதை எதை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்?

❖ இவ்வாறு என்னை மாற்றத் தூண்டியது ஏன்?

❖ முன்பு இது போல் நான் இருந்திருக்கின்றேனா? அப்படியெனில் எவ்வளவு காலம்?

❖ இதிலிருந்து விடுபட நான் என்ன செய்ய முடியும்? இவற்றை முயன்று பாருங்கள் உங்கள் வாழ்க்கைப் பாதையை திட்டமிடுங்கள்

பகிர்ந்து கொள்வதற்காக உரையாடுங்கள், உங்களுக்கு நெருக்கமானவருடன் தேவையான அளவிற்குப் பிரச்சினை பற்றி உரையாடுங்கள்

உங்கள் உடலில் ஏற்படுத்தப்பட்ட சக்தி அதிகரிப்பை வேலைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள், ஆடைகளைத் தோயுங்கள், அறைகளைச் சுத்தம் செய்யுங்கள்.

ஆறுதல் பெற்றுக்கொள்ளுங்கள் உங்கள் மனம் விரும்பும் இடங்களைத் தெரிவு செய்து நேரத்தைச் செலவிடுங்கள், அது பூங்காவோ, கோயிலாகவோ, கடற்கரையாகவோ இருக்கலாம். உங்கள் மனப்பாரத்தை இளகச் செய்யுங்கள். அது இனிய இசையைக் கேட்பதன் மூலமாகவும் இருக்கலாம்.

உங்களை வாய்விட்டுச் சிரிக்க வைக்கக்கூடிய நண்பர்களுடன் பழகுங்கள். சிரிப்பைத் தரக்கூடிய திரைப் படங்களை பாருங்கள். சிரித்து வெற்றி பெறுங்கள், வாழ்க்கை நிமிடங்களால் ஆனது. எந்தவொரு இழப்பையோ, கவலையையோ, பிரச்சினையையோ ஒரு நிமிடத்திற்கு உங்களால் மறக்க முடியும். அப்படியே அடுத்த நிமிடத்தையும் தாண்டுங்கள். பின் அடுத்த நிமிடம்... ஒவ்வொரு நிமிடங்களையும் வெற்றி கொள்ளுங்கள். வாழ்க்கையை நீண்ட பயணமாகப் பார்ப்பதைத் தவிருங்கள்.

பின் உங்களை, மணித்தியாலங்களை வெற்றிகொள்ளக்கூடியதாக மாற்றிக் கொள்ளுங்கள். நீங்கள் அழுத்தங்களை வெற்றிகொண்டு வாழத்தொடங்குவீர்கள்.

**Dr. பா. திலீபன்**

## சீனிக்கு பதிலாக பாவிக்கப்படும் இனிப்பூட்டிகள் பாதுகாப்பானவையா?

இவை மிகவும் இனிப்பான பதார்த்தங்களாக இருந்தபொழுதும், இவற்றுக்கு குருதி குளுக்கோசின்அளவை அதிகரிக்கும் தன்மையோ அல்லது உடல் நிறையை அதிகரிக்கும் தன்மையோ இல்லை.

அத்துடன் இவற்றுக்கு இரத்தத்திலே, அல்லது உடலிலோ கொழுப்பின் அளவை அதிகரிக்கும்தன்மைகூட இல்லை. சீனி, சர்க்கரை போன்ற இனிப்பு வகைகளைப் பாவித்தால் பற்களில் பாதிப்புகள்

ஏற்படலாம் என்பது அனைவருக்கும் தெரியும். அத்தகைய பாதிப்புகள் செயற்கை வகையான இந்த இனிப்பூட்டிகள் பாவிப்பதால் ஏற்படமாட்டாது.

இந்த இனிப்பூட்டிகளின் பாவனையால் ஏதாவது ஆபத்து நிகழுமா? அல்லது உடற் பாதிப்புகள் ஏற்படுமா? என்பது சம்பந்தமாக செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் அளவுடன் இவற்றை பாவிப்பது பாதுகாப்பானது என்பதை உறுதி செய்திருக்கின்றன. அளவுக்கு அதிகமாக எந்த உணவையும் உண்பது பாதுகாப்பானதல்ல என்பதையும் மனதில் கொள்ளவேண்டும்.


பாயாசம், தேநீர், ஐஸ்கிறீம்வகைகள் மோதகம் போன்றவற்றுக்கும் இந்த இனிப்பூட்டிகளைப் பாவிக்கமுடியும். நீரிழிவு நோய் உள்ளவர்கள் மட்டுமல்ல குடும்பத்தில் எந்த நோய் உள்ளவர்களும் அதிகரித்த நிறை உள்ளவர்களும் நிறை அதிகரிப்பை தடுக்க விரும்புவர்களும் சீனி, சர்க்கரைக்கு பதிலாக இந்தஇனிப்பூட்டிகளைப் பாவிப்பது பாதுகாப்பானது.


**Dr. சி.சிவன்சுதன்**
**(பொது வைத்திய நிபுணர்)**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய தீ மிதிப்பில் வெளிநாட்டவர் பங்கேற்பு





(மட்டக்களப்பு)

இலங்கையில் அதிகளவாக பக்தர்கள் தீ மிதிப்பு உற்சவத்தில் கலந்து கொள்ளும் ஆலயம் என்ற பெருமையினைக் கொண்ட கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு புன்னைச் சோலை அருள்மிகு பத்திரகாளியம்மன் ஆலயத்தின் தீமிதிப்பு உற்சவம் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் புடைசூழ வெகு விமர்சையாக நடை பெற்றது.

இந்த ஆலயத்தில் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கலந்துகொண்டதுடன் வெளிநாட்டவர்களும் கலந்துகொண்டு தீயில் இறங்கி நேரத்திக்கடன்களை செலுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

(நி-6)


## மணமகன் தேவை

1994 சுவாதி. யாழ்ப்பாணம் Doctor. மணமகள் பதிவு இல. 9665 பதிவு கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை. 14.06.2024 வரையான பதிவுகளுக்கு 50% விலைக்கழிவு www.EQMarriage Service.com, Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04.

அழையுங்கள் 076 664 9401

## மணமகன் தேவை

1991. சுவாதி. யாழ்ப்பாணம். Teacher. மணமகள் பதிவு இல. 9440 பதிவு கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை 14.06.2024 வரையான பதிவுகளுக்கு 50% விலைக்கழிவு. www.EQMarriage Service.com, Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04.

அழையுங்கள் 076 664 9401

## மணமகள் தேவை

1990. மகம். யாழ்ப்பாணம். Engineer, Canada மணமகன் பதிவு இல 9738 பதிவு கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை. 14.06.2024 வரையான பதிவுகளுக்கு 50% விலைக்கழிவு www. EQ Marriage Service.com, Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04.

அழையுங்கள் 076 664 9401

## மணமகள் தேவை

1977. பூரம். யாழ்ப்பாணம் IT consultant, UK மணமகன் பதிவு இல 10100. பதிவு கட்டணம் மட்டுமே தரகர் கூலி இல்லை. 14.06.2024 வரையான பதிவுகளுக்கு 50% விலைக்கழிவு www. EQMarriage Service.com, Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04.

அழையுங்கள் 076 664 9401

## மணமகள் தேவை

1991. மிருகசீரிடம். யாழ்ப்பாணம் Civil Engineer, Australia. மணமகன் பதிவு இல 10203. பதிவு கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை. 14.06.2024 வரையான பதிவுகளுக்கு 50% விலைக்கழிவு. www. EQ Marriage Service.com, Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04.

அழையுங்கள் 076 664 9401


## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக நண்பி கிருபாஜினி அவர்களின்

பாசமிகு தாயார்

### அமரர். நடராஜா பரமேஸ்வரி

அவர்களின் மரணச்செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும் அவர் தம் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குறிப்பு: இறுதிக்கிரியைகள் 09.06.2024 நாளை ஞாயிற்றுக்கிழமை 10 மணிக்கு அவர்களது இல்லமான முதலாம் கட்டை, டச்சு றோட், சாவகச்சேரி எனும் முகவரியில் நடைபெறும்

பிரிவால் துயருறும்
1989/90 யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட நண்பர்கள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 400 | 250 | 400-700 | 500 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 100 | 150 | 200 |
| தக்காளி | 350 | 300 | 200 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 150 | 150 | 120-140 | 200 |
| கோவா | 350 | 260 | 250 | 200 | 300 |
| கரட் | 300 | 280 | 300 | 250 | 400 |
| பூசணி | 120 | 140 | 120 | 100 | 120 |
| புடோல் | 200 | 180 | 200 | 130 | 300 |
| வாழைக்காய் | 120 | 130 | 100 | 80-100 | 160 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 250-300 | 300-500 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 250 | 250 | 240 |
| பாகற்காய் | 800 | 1000 | 800 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 300 | 260 | 300 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 120 | 100 | 200 |
| பயற்றங்காய் | 450 | 400 | 100 | 250-400 | 400 |
| லீக்ஸ் | 350 | 600 | 350 | 350 | 600 |
| பீற்றூட் | 550 | 500 | 600 | 320 | 600 |
| கறிமிளகாய் | 550 | 500 | 200 | 480 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 650 | 600 | 300-450 | 800 |
| போஞ்சி | 600 | 600 | 600 | 350 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 250 | 180 | -- | 480 |
| கீரை - 1 பிடி | 140 | 120 | 100 | 100-130 | 130 |
| தேசிக்காய் | 800 | 1000 | 1000 | 800-1000 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 100 | 60-110 | 80-120 |
| இராசவள்ளி | 450 | 450 | 400 | -- | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 200 | 200 | 200 | 100 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 90 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 180 | 120 | 100 | 280 |



## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு

### அடியார்களுக்கான அறிவித்தல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் பெயரைப் பயன்படுத்தி நிதி வசூலிப்பதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அறங்காவலர் சபையினரால் எந்தவொரு தனிப்பட்ட நபருக்கோ, பொது அமைப்புக்களுக்கோ, நிதி சேகரிப்பதற்கோ, பொருள் சேகரிப்பதற்கோ எதுவித அனுமதியும் வழங்கப்படவில்லை.

தற்சமயம் உயர்திருவிழா ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிலையில் ஆலயத்தின் பெயரைப் பயன்படுத்தி நிதியோ, பொருளோ சேகரிப்பதற்கு தங்களிடம் வருவார்களாயின் அடியார்கள் அவர்களிடம் வழங்க வேண்டாம். ஆலயத்திற்கு அன்பளிப்புச் செய்ய விரும்புபவர்கள் நேரடியாக ஆலய காரியாலயத்தில் வழங்கி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம். வங்கி மூலம் வைப்புச் செய்ய விரும்புபவர்கள் பின்வரும் கணக்கு இலக்கங்களுக்கு வைப்புச் செய்து விபரங்களை அனுப்பி வைப்பதன் மூலம் தங்கள் முகவரிக்கு உரிய பற்றுச்சீட்டு அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் கோவிலின் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

### கணக்கு இலக்கங்கள்

இலங்கை வங்கி - வேலணை
- 7687860
- 86645863

வர்த்தக வங்கி - வேலணை
- 1060012330

வர்த்தக வங்கி - கொழும்பு
- 012426285 - 01

தொலைபேசி இலக்கங்கள்
- 021 4323 440
- 021 4323 447

அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

(தி-554)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

யாழ்ப்பாணம் - அரியாலை நீர்நொச்சித்தாழ்வு

அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்

மஹா கும்பாபிஷேக பெருவிழா - 2024



தென்னிந்திய கர்நாடக இசைப்பேரரசி கலைமாமணி

டாக்டர் நித்யஸ்ரீ மகாதேவன் அவர்களின்

"தெய்வீக இன்னிசைக்கச்சேரி"

இடம் : ஆலய முன்றல்

10 ஆனி 2024 திங்கட்கிழமை இரவு 7.00 மணி முதல்

அணிசேர் கலைஞர்கள்:

வயலின் - பேராசிரியர் M.A.கிருஷ்ணசாமி

மிருதங்கம் - நெய்வேலி சு.ஸ்கந்த சுப்ரமணியன்

முகர்சிங் - நா.சுந்தர்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பூரண அனுசரணை :

அரியாலையூர் நோர்வே வாழ் விநாயகர் அடியார்

திரு.N.நேதாஜி அவர்கள் (1137)

---

லங்கா மஹால் (PVT) LTD

DHL

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | - 1490/= | சுவிஸ் | - 2050/= |
| கனடா | - 2290/= | பிரான்ஸ் | - 2290/= |
| லண்டன் | - 1250/= | அவுஸ்திரேலியா | - 2350/= |
| அமெரிக்கா | - 2290/= | இத்தாலி | - 2490/= |
| ஜேர்மனி | - 2250/= | நோர்வே | - 2050/= |

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.

நம்பகமான சேவை.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு

077 8393 974

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்து தரப்படும்.

இந்தியா தொடர்புகளுக்கு :

00919566156719

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம். (1083) (1145)

---

காணி விற்பனைக்கு

ஊரெழு திருமண மண்டபத்திற்கு முன்பாக உள்ள ஒழுங்கையில் 300 M தூரத்தில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவை இல்லை.

தொடர்பு கொள்க. (1076)

077 669 2415

076 337 1419

---

விற்பனையாளர்கள் தேவை

யாழ்.முகவர்களான கனகலிங்கம்-திலகவதி தேசிய லொத்தர்சபை, அபிவிருத்தி லொத்தர் சீட்டுகள் கூடாரங்கள், நடமாடி மற்றும் சைக்கிள்களில் விற்பனை செய்வதற்கு, தொடர்பு கொள்ளவும் 077 603 1723. முன் அனுபவமுள்ளவர்களும் 30 வயதிற்கு மேற்பட்டவர்களும் விரும்பப்படுவர். (1153)

இல 4 KKS வீதி

லொத்தர் விற்பனை முகவர் நிலையம்,

யாழ்ப்பாணம். (அன்னை நாகா பூட்சிற்றி முன்)


## பெயர் மாற்ற அறிவித்தல்

மாசியப்பிட்டி சண்டிலிப்பாயை சேர்ந்த வாமதேவன் - சுஜீதேவா ஆகிய நான் 09.06.2024 இன்று முதல் எனது பெயரை வாமதேவா-சுஜிதேவா என பெயர் மாற்றம் செய்கின்றேன். இனிவரும் காலங்களில் எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.(1152)

உண்மையுள்ள-வாமதேவா-சுஜிதேவா.

# இரத்ததான முகாம்

(சாவகச்சேரி)

மனிதநேயத்தை வலியுறுத்தும் நோக்கில் வேள்ட் விசன் நிறுவன அனுசரணையுடன் இதம் நிறுவனமானது இன்பக்ற் பிளஸ் கழக சிறார்களுடன் இணைந்து நடத்தும் மாபெரும் தன்னார்வ இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் 3 மணிவரை கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

குருதிக்கொடையாளர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(நி-6-30)


# VACANCY

Applications are hereby invited from qualified persons for the following vacancies:

- Teacher-Chemistry(English Medium)
- Senior Work Supervisor
- Office Assistant

Please send your complete CV with photo copies of relevant certificates and the contact details of two non-related referees by registered post to reach us Before 30th June 2024 to the address below. Only shortlisted candidates will be called for an interview. (C-553)

The Principal
St.John's College,Jaffna.

---

31 ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்



யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.க பாடசாலை ஆசிரியர் திருமதி.அனுசிகா மதுரன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர்.

திருமதி. பத்மநாதன் சுப்புலட்சுமி

அவர்களின் ஆத்மா சாந்தியடைய அன்னாரின் 31 ஆவது நாளில் இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (0082)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலை.


# இராசிபலன்

09.06.2024
வைகாசி 27 , ஞாயிற்றுக்கிழமை,
திருதியை பிற்பகல் 5.28 மணிவரை

புனர்பூசம் முன்னிரவு 10.17மணிவரை
சுபநேரம் -8.52-10.22 மணிவரை
இராகுகாலம் -4.22-5.52 மணிவரை

சந்திராஷ்டமம்.
விசாகம், அனுசம்.

வளவன்

**மேஷம்** தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள், தொல்லை கொடுத்தவர்கள் தோள்கொடுத்து உதவ முன்வருவர், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்** பணப்புளக்கம் அதிகரித்தாலும் அடுத்தவர் செலவுகளால் திணறுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும், சயனசுகக் குறைவான நாள்.

**துலாம்** எதிர்பாராத சில சம்பவங்கள் நடைபெறும் நாள், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**மகரம்** கடமையில் கண்ணும் கருத்தமாக இருப்பீர்கள்,தேவைகள் பூர்த்தியாகும், தொல்லை கொடுத்தவர்கள் விலகுவர், பழைய பிரச்சினைகளைத் தீர்க்க முழு மூச்சுடன் செயற்படுவீர்கள்.

**ரிஷபம்** தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள்,கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்** தொலைபேசி வழித் தகவலால் உற்சாகமடைவீர்கள், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** எதையும் யோசித்துச் செய்வது நல்லது, சுணங்கிய காரியங்கவில் மாலை நேரம் முன்னேற்றம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

**கும்பம்** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்,பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.

**மீனம்** மனதில் இனம்புரியாத கற்பனைகள் தோன்றி மறையும், வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

அச்சம் என்பது மனிதர்களை ஒன்றுமே இல்லாமல் ஆக்கிவிடுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உலகமே என் தேசம், நன்மை செய்தலே என் கொள்கை. - தாமஸ் பெய்ன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கல்வி அமைச்சரின் திட்டம் அமுலாக்கப்பட வேண்டும்

21 வயதில் இளமாணிப் பட்டத்தை நிறைவு செய்தல். 27 வயதில் கலாநிதிப் பட்டத்தைப் பூர்த்தி செய்தல் என்றவாறு கல்வி முறை கொண்டுவரப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

உண்மையில் அவரின் இந்தத் திட்டம் வரவேற்கப்பட வேண்டும்.

பொதுவில் வேலை செய்ய வேண்டிய வயதில் பட்டப்படிப்பில் மாணவர்கள் ஈடுபடுவது ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு உகந்ததல்ல.

பொதுவில் வெளிநாடுகளில் மிகக் குறைந்த வயதில் பட்டப்படிப்பை நிறைவு செய்கின்ற கல்வித் திட்டம் நடைமுறையிலுள்ளது.

தவிர, பட்டப்படிப்பை மேற்கொள்ளும்போது பகுதி நேரமாக வேலை செய்கின்ற ஏற்பாடுகளும் வெளிநாடுகளில் இருப்பதைக் காண முடியும்.

ஆனால் எங்கள் நாட்டில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் ஒரு மாணவன் வேலை செய்யக்கூடாது என இருந்த இறுக்கமான நடைமுறை இன்னமும் தொடர்கிறது.

இதனால் பட்டப்படிப்பை உள்வாரியாக மேற்கொள்கின்ற மாணவர்கள் தமது வீட்டுப் பொருளாதாரத்துக்காக உழைக்க முடியாத மிக மோசமான நிலைமை இருக்கிறது.

அதாவது வீட்டில் மிகக் கஷ்டமான பொருளாதார நிலைமை இருக்கின்ற போதிலும் பட்டப்படிப்பு என்பதற்காக, ஓர் இளைஞன் உழைக்க முடியாத நிலைமை இருப்பது ஏற்புடையதல்ல.

மாறாக, உழைக்க வேண்டிய வயதில் முழு நேரமாகப் படிப்பதென்பதும் அர்த்தமற்றது.

அந்த வகையில், எமது மாணவர்கள் மிகக் குறைந்த வயதில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்யக் கூடியதான ஏற்பாடுகளை அமுலாக்குவது மிகவும் அவசியமானது.

இவ்வாறு குறைந்த வயதில் மாணவர்கள் தமது பட்டப்படிப்பை நிறைவு செய்து வேலை செய்யும் போது, அவர்களிடம் இருந்து உச்சமான அறிவாற்றலையும் அவர்களின் வினைத்திறனும் விளைதிறனுமுடைய உழைப்பையும் பெற்றுக் கொள்ள முடியும்.

அதேநேரம் குறைந்த வயதில் வேலை செய்து உழைக்கின்றபோது, அது சம்பந்தப்பட்ட இளைஞர்களின் ஆளுமைக்கும் உள ஆரோக்கியத்துக்கும் சாதகமாக அமையும்.

எனவே கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முன்மொழிந்த மேற்போந்த திட்டத்தை அமுலாக்க அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும்.

இவ்வாறு பட்டப்படிப்பை 21 வயதில் நிறைவு செய்யும் திட்டம் அமுலாகும்போது, தரம் 10 இல் சாதாரண தரப் பரீட்சையை நடத்துகின்ற கல்வி முறைமை அமுலாகுவது இலகுவானதாக அமையும்.

## யாழில் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட ஆசிரியர் நியமனம் பறிப்பு

### மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனத்தில் வழங்கப்பட்ட நியமனத்தை இரத்துச் செய்தமை தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் பட்டதாரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த மாதம் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் வடக்கில் ஆசிரியர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலை அரங்கில் இடம்பெற்றது.

குறித்த வைபவத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் பட்டதாரி ஒருவருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட நிலையில் குறித்த நியமனத்தில் தவறு இருப்பதாக மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு பரிந்துரை செய்த நிலையில் சில நாட்களில் மீளப் பெறப்பட்டது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட பட்டதாரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய அலுவலகத்திற்கு எழுத்து மூலமான முறைப்பாட்டை வழங்கியுள்ளார்.

குறித்த முறைப்பாட்டில் நான் ஆசிரியர் நியமனத்தை கேட்டுப் பெறவில்லை எனவும் தனக்கு வழங்கிய நியமனத்தை மீளப் பெற்றதன் மூலம் உளரீதியான பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதுடன் சமூகத்தில் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமில்லாது எனது நியமனத்தை மீளப் பெற்றதன் மூலம் நான் அரச சேவையை முறை தவறிப் பெற்றதாக சமூகத்தில் கருத்துக்கள் உருவாகின்ற நிலையில் தனக்குரிய பரிகார நீதியை வழங்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-7,10)

## நுகர்வோரைப் பாதுகாக்கும் சட்டம் இருவாரங்களில் சமர்ப்பிக்க நடவடிக்கை

### அமைச்சர் நளின் பெர்னாண்டோ

(கொழும்பு)

நுகர்வோரைப் பாதுகாக்கும் வகையில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்துக்கான திருத்தங்களை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென வர்த்தக, வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள நுகர்வோர் சட்டம் கடந்த 20 வருடங்களாக திருத்தம் செய்யப்படவில்லை. இதை சபையில் சுட்டிக்காட்டிய அமைச்சர், தற்போதுள்ள சட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும், தற்போது சட்டமாஅதிபரின் கவனத்துக்கு இது அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சுமித் உடுகும்புர எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தமது கேள்வியின் போது, எரிபொருள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளன.

எனினும், இதன் பிரதிபலன் நுகர்வோருக்கு கிடைப்பதில்லை. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை என்ன என அவர் அமைச்சரிடம் வினவினார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், அத்தியாவசிய பொருட்களின் விலைகள் தற்போது குறைவடைந்து வருகின்றன. இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

எனினும் நுகர்வோர் அதிகார சபையின் விசாரணைப் பிரிவு அதிகாரிகள் குறைபாடு காணப்படுகின்றது. நாடளாவிய ரீதியில் 277 அதிகாரிகளே தற்போது சேவையில் உள்ளனர்.

இந்நிலையை நிவர்த்தி செய்யும் வகையில் மேலும் விசாரணை பிரிவு அதிகாரிகளை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் இந்நடவடிக்கையை முன்னெடுக்க முடியும். விரிவான சந்தை நடவடிக்கைகள் நாட்டில் இடம் பெறுவதால் நுகர்வோருக்கு அநீதி ஏற்படுவதை அறிய முடிகிறது.

அதிக இலாபத்தை நோக்காகக் கொண்டு வர்த்தகர்கள் செயற்படுகின்றனர் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார். (ம-7,10)

## நீதியமைச்சர் விஜயதாச மீது ஒழுக்காற்று நடவடிக்கை

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச நியமிக்கப்பட்ட நிலையில் இதற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான அறிவித்தல் ஒழுக்காற்று சபைக்கு அனுப்பப்பட்டதாகவும், ஒழுக்காற்று சபையின் அறிக்கை தற்போது கட்சிக்கு கிடைத்துள்ளதாகவும் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

விஜயதாச ராஜபக்ச வின் இவ்வாறான செயற்பாடுகள் கட்சியின் அரசியலமைப்பை மீறும் செயலாகும் என ஒழுக்காற்று சபை சுட்டிக்காட்டியுள்ளதாக சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை எந்தவொரு அரசியல் கட்சியும் தன்மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டாலும் அதனை எதிர்கொள்ள தயார் என நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7,10)

## கேகாலையில் விபத்து 26 வயது யுவதி மரணம்

கேகாலை மங்களகம பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 26 வயதுடைய யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து கண்டி செல்லும் பிரதான வீதியில் கேகாலை மங் [illegible] முச்சக்கர வண்டியொன்று எதிர்த்திசையில் இருந்து வந்த லொறியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது முச்சக்கரவண்டியில் மூவர் பய [illegible] தெரியவந்துள்ளது. (ம-7,10)

## ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார, சமூக சபைக்கு இலங்கை மீண்டும் தேர்வு

ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக சபைக்கு மீண்டும் இலங்கை தேர்வு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் கடந்த வியாழக்கிழமை நியூயோர்க்கில் இடம்பெற்ற வாக்கெடுப்பின் போது இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலதிகமாக 07 வாக்குகள் கிடைக்கப் பெற்று இலங்கைக்கு மொத்தமாக 182 வாக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக சபைக்கு இலங்கை தேர்ந்தெடுக்கப்பட்டது.

சபையின் உறுப்பினராக, வறுமை ஒழிப்பு, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாலின சமத்துவம் உள்ளிட்ட திட்டங்களுக்கு இலங்கை பங்களிப்பதாக வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவட்ட ரீதியில் சாதித்த மாணவி வஜினாவிற்கு கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)
க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாவட்ட ரீதியாக முதலாவது இடத்தையும், அகில இலங்கை ரீதியாக 32 ஆவது இடத்தையும் பெற்ற பாலகிருஷ்ணன் வஜினாவிற்கு நேற்று முன்தினம் யாழில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

மாணவி கல்வி கற்ற பாடசாலையான பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர கல்லூரியில் இருந்து, மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க, ஊர் மக்கள், ஆசிரியர்கள், சக மாணவர்கள், கல்விமான்கள், அயல் ஊரவர்கள் என அனைவரும் புடைசூழ அவரது ஊரான சாந்தை கிராமத்திற்கு ஊர்வலமாக காரில் அழைத்துச் செல்லப்பட்டார். பின்னர் சாந்தை சனசமூக நிலையத்தில் குறித்த மாணவிக்கு கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. (நி-6-33)

## முழங்காவில் மகாவித்தியாலயத்தில் வளங்கள் பற்றாக்குறை

### நிவர்த்தி செய்யுமாறு பெற்றோர் கோரிக்கை

(அக்கராயன்)
கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயம் ஆளணி பௌதீகவள நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. இவற்றை நிவர்த்தி செய்யக்கோரி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலைகளில் ஒன்றாக இப்பாடசாலை விளங்குவதுடன் 800 மாணவர்கள் இப் பாடசாலையில் கல்வி கற்கின்றனர்.

இவ்வாண்டு வெளியான உயர்தர முடிவுகளின் படி தொழில்நுட்பபாடத்தில் மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தினையும் வர்த்தக பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம் இடங்களினையும் இப்பாடசாலை மாணவர்கள் பெற்றிருந்தனர்.

கணித, விஞ்ஞான பிரிவுகளுக்கு ஆசிரியர்கள் இல்லாதன் காரணமாக மாணவர்களினால் பரீட்சை பெறுபேறுகளில் சாதிக்க முடியாமல் உள்ளது.

இப்பாடசாலையினை நம்பி இரணைமாதாநகர், கரியாலை நாகபடுவான், நாச்சிக்குடா, வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, ஜெயபுரம் ஆகிய கிராமங்களில் மாணவர்கள் உள்ள போதிலும் இப்பாடசாலையின் உயர்தர கணித, விஞ்ஞான பிரிவு ஆசிரியர்களின் பற்றாக்குறையினை நிறைவு செய்து பாடசாலையின் பௌதீக வள நெருக்கடியினையும் தீர்ப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாணவர்கள், பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-6-350)

## ஈவினைப் பகுதியில் 8 வாள்கள் மீட்பு

### சந்தேக நபர் கைது

(யாழ்ப்பாணம்)
வாள் கூரிய ஆயுதங்களுடன் சுன்னாகம் ஈவினை பகுதியில் சந்தேக நபரொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு பிரஜை ஒருவருக்கு சொந்தமான வீட்டிலே வாள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்கள் இருப்பதாக யாழ். பிராந்திய விஷேட குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய குறித்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது எட்டு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன் சம்பவம் தொடர்பாக கைதான சந்தேக நபரிடம் விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை குறித்த நபர் பல்வேறுபட்ட வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார், குறித்த விடயத்தில் வெளிநாட்டு பிரஜைக்கும் தொடர்புள்ளதா அல்லது வேறு நபர்களுக்கு தொடர்புள்ளதா என்ற கோணத்தில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-33)

## விபத்தில் சிக்கி ஆசிரியர் படுகாயம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி நகரப் பகுதியை அண்மித்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் பாடசாலை ஆசிரியை ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வீதியை கடக்க முற்பட்ட ஆசிரியையை வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளியதில் ஆசிரியை படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நகரப் பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் 49 வயதான ஆசிரியை ஒருவரே இவ்வாறு விபத்தில் சிக்கி காயமடைந்துள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)

## உவர் பரம்பலை தடுக்க நடவடிக்கை எடுங்கள்

### கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயகன்)
கிளிநொச்சி மாவட்டத்தில் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம் உவரினால் அழிவடையும் ஆபத்தினை எதிர்கொண்டுள்ளன.

2010 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் வன்னேரிக்குளத்தில் மக்கள் மத்தியில் கூட்டம் ஒன்றினை நடத்தியது. அதன் போது மண்டைக்கல்லாறு வழியாக வன்னேரிக்குளத்திற்கு வருகின்ற உவர் நீரினை தடுப்பதற்கு உவர் தடுப்பணை அமையுங்கள் என கோரிக்கை விடுக்கப்பட்டும் முறைப்படுத்தப்படாமையால்,2000 ஆம் ஆண்டில் உவர் பரம்பல் ஏற்பட்ட போது தடுக்காததன் காரணமாக பல்லவராயன் கட்டு முழுமையாக உவரடைந்தமையால். மக்களும் இடம் பெயர்ந்தனர்.

வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம் ஆகிய இரு கிராமங்களும் உவரடைந்து வருகின்றமையால் விவசாயத்தினை கைவிட்டு இடம் பெயர வேண்டிய சூழ்நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இரு கிராமங்களிலும் உவர்ப்பரம்பல் ஏற்படுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-350)

## புதுக்காட்டில் புதையல் அகழ்வில் ஈடுபட்ட ஐவர் கைது

### ஸ்கானர் இயந்திரங்கள் மீட்பு



(தருமபுரம்)
கிளிநொச்சி இராமநாதபுரம் பொலிஸ் பிரிவில் புதுக்காடு பகுதியில் தங்கத்தை தோண்டிய குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணிக்கு இராம நாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்காடு பகுதியில் முன்பு விடுதலைப்புலிகள் பயன்படுத்திய முகாம் உள்ள பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட போது குறித்த ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன் புதையல் தோண்ட பயன்படுத்திய இயந்திரங்கள் மீட்பு.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பொலிஸ் தலைமையகத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தரும் ஆவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஏறாவூர், தம்பலகாமம், கொழும்பு பகுதியை சேர்ந்தவர்கள் ஆவார். விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராமநாதபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-316)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டபபூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதிவலம் வரும் காட்சி இடம் பெறும் என ஆலய பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார்.

### விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் ஆரம்பம்

2023ஆம் ஆண்டிற்கான சாதாரண தரப் பரீட்சையின விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் நேற்று ஆரம்பமானது.

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக விடைத்தாள் திருத்தும் பணி பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## கசிப்பு விற்பனை மூவர் கைது

(யாழ்ப்பாணம்)
வடமராட்சி-குடத்தனை பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை இடம்பெறுவதாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய குறித்த பகுதியில் உள்ள பல வீடுகளில் சோதனை இட்ட வேளை வீடொன்றில் கைது செய்யப்பட்ட மூவர் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவின்...

பதி திரௌபதி முர்மு இரவு 7.15 மணிக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கவுள்ளார்.

மோடியின் பதவியேற்பு விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்ஸு, சிசல்ஸ் துணை ஜனாதிபதி அகமது அபிப், மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் குமார் ஜக்நாத், நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹல், பூட்டான் பிரதமர் ஷெரிங் டோப்கே உள்ளிட்ட 7 அயல் நாடுகளின் தலைவர்கள் பங்கேற்க உள்ளனர். (ம-7,10)

## இலங்கைக்கான...

சமத்துவம், சமூக நீதியை அடிப்படையாக கொண்டு சுயமரியாதை நடைபயணமொன்று யாழில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தின் முன்பாக ஆரம்பமான குறித்த நடைபயணம், முதலில் சத்திரச்சந்தியை நோக்கி பயணித்து, பண்ணை வீதியூடாக பொலிஸ் நிலைய வீதி, பொது நூலகம் முன்பாக சுயமரியாதை நடைபயணம் நிறைவடைந்தது.

சுயமரியாதை, சமத்துவம், சமூக நீதியை அடிப்படையாக கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட சுயமரியாதை நடைபயணத்தில் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கிய வாறு நடை பயண பேரணி முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நடைபயணத்தில் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வாஸ் உட்பட தூதரக அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10,33)

## அரசியற்...

யற் கருத்துக்களமானது இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.59 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரியில் அமைந்துள்ள தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண பேரவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும். (ம-7,10)

## திருநெல்வேலி...

ருந்து தனது குடும்பத்துடன் நபர் ஒருவர் அரியாலை பகுதிக்கு வருகை தந்து வீடொன்றினை வாடகைக்கு எடுத்து தங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் திருநெல்வேலிப் பகுதியில் வெற்று தாள்களையும் போலி இயந்திரத்தினையும் விற்பனை செய்ய முயன்ற பொழுது கோப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைவாக சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபரை கைது செய்ததோடு சான்றுப் பொருட்களையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து சந்தேகநபர் தங்கியிருந்த வீட்டை சோதனையிட முற்பட்ட நிலையில் வீட்டிலிருந்த குடும்பத்தினர் தப்பிச்சென்றிருந்தமை தெரிய வந்தது.

தொடர்ந்து குறித்த நபருக்கு எதிராக யாழ் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ம-7,10)

## முல்லையில்...

களுக்கு முன்னர் வற்றாப்பளை பகுதியில் தமது வீட்டின் முன்பாக தாயுடன் நின்றிருந்த குழந்தை மீது மோட்டார் சைக்கிளொன்று மோதியதில் குழந்தை காயமடைந்தது.

விபத்துக்குள்ளான அக்குழந்தையின் வீட்டாருக்கும் மோட்டார் சைக்கிளில் சென்று விபத்தினை ஏற்படுத்திய தாக கூறப்படும் கனடா நாட்டிலிருந்து வருகை தந்த நபருக்கும் இடையே முன்னதாக முரண்பாடு இருந்துள்ளது.

இந்நிலையில், அவ்விபத்துச் சம்பவத்தினையடுத்து, நேற்று அதிகாலை ஒரு மணியளவில் வெளிநாட்டிலிருந்து வந்த நபரின் தலைமையில் கும்பலொன்று வீடு புகுந்து இளைஞனை தாக்கிவிட்டு தப்பித்துச் சென்றுள்ளது.

அதனையடுத்து, அவர்கள் வருகை தந்ததாக கூறப்படும் மோட்டார் சைக்கிள் இலக்கத்தின் அடிப்படையில், முள்ளியவளை பொலிஸார் சந்தேக நபரின் வீட்டுக்குச் சென்று தாக்குதலின்போது பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளை கைப்பற்றியுள்ளனர்.

ஆனால் இத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இதுபற்றி பாதிக்கப்பட்ட தரப்பினரின் உறவினர்கள் தெரிவிக்கையில்,

வெளிநாட்டிலிருந்து வந்த நபர் ஒரு கும்பலை வைத்து தாக்குதல் நடத்திவிட்டு, கனடா நாட்டுக்கு தப்பித்து சென்றதாகவும், இது ஒரு கொலை முயற்சி எனவும் இத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி தீர்வினை பெற்றுத்தர வேண்டும் எனவும் கூறியுள்ளனர்.

இந்த தாக்குதலில் காயமடைந்த வற்றாப்பளை பகுதியில் வசிக்கும் 27 வயது இளைஞன் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (ம-7,10,299)

## எதிர்வரும்...

துள்ளார் ரணில்.

எவ்வாறாயினும் ரணிலை ஆதரிப்பதா இல்லையேல் தனி வேட்பாளரை நிறுத்துவதா என்பதுபற்றி பொதுஜன பெரமுன எதிர்வரும் வாரம் இறுதியான தீர்மானத்தை எடுக்கவுள்ளது. (ம-7,10)

## மோடி வெற்றி...

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"இந்திய பாராளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி கூட்டணி 300 முதல் 350 ஆசனங்களைக் கைப்பற்றக் கூடும் என எதிர் பார்த்தேன்.

எப்படி இருந்தாலும் பிரதமர் மோடியின் வெற்றி இலங்கைக்கு நன்மை பயக்கும். மோடி வெற்றி பெற்றமை இலங்கைக்கு நன்மையே.

ஏனெனில் இந்தியாவில் நிலையான தொரு ஆட்சி இருக்கும்போது, இலங்கை தொடர்பான கொள்கையை மத்திய அரசே தீர்மானிக்கும்.

சிலவேளை மத்திய அரசு பலவீனமாகி, ஆட்சியமைக்க தமிழ் நாட்டின் உதவி தேவைப்படும் பட்சத்தில் இலங்கை தொடர்பான கொள்கையைத் தமிழகமே தீர்மானிக்கும். அப் போதுதான் இரு நாட்டுக்கும் இடையிலான உறவில் தாக்கம் ஏற்படும்.

எனினும், தமிழகத்தின் ஆதரவின்றி மோடி வெற்றி பெற்றிருப்பது இலங்கைக்கு நல்லதே" என்றார். (ம-7,10)

# சவேந்திர சில்வாவுக்கு சேவை நீடிப்பு

(கொழும்பு)

பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை அவருக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக இந்த சேவை நீடிப்பு தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (ம-7,10)

## சஜித் இன்று...

களுக்கு 1,177,000 ரூபாய் பெறுமதியான கணினிகள், அச்சு இயந்திரங்கள், ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் ஸ்மார்ட் திரைகள், அகராதிகள் என்பன வழங்கி வைக்கப்படவுள்ளன.

மேலும், பாடசாலையொன்றுக்கு 50 இலட்சம் ரூபா மதிப்பிலான பஸ் ஒன்றும் வழங்கி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.06.08
சீட்டிழுப்பு இலக்கம் 5498
B 4 4 6 4 6 4
அத சம்பத
B 6 4 6 4
சீட்டிழுப்பு இலக்கம் 073
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.06.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1528
N 15 25 39 77 N
Double Chance 40205

மெகா பவர்
திகதி 08/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1846
J 17 07 16 56 66
Double Chance 16645

லக்கி 7 VIP
திகதி 2024.06.08
சீட்டிழுப்பு இலக்கம் 324
G 5 0 5 7 4 0 G

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3740
சீட்டிழுப்பு திகதி 08.06.2024
S 05 12 15 68
S 20377
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.08
சீட்டிழுப்பு 0807
தனுசு 27 51 52 58 தனுசு
79991 02

உத்தியோகபூர்வ முடிவுகள்
08.06.2024 வெற்றி வாரம் 206 வர்ணம் நீலம்
S 0 9 0 8 8 1
66650 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23,604,340.00
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
வெற்றி வாரம் 2472 வர்ணம் நீலம் 08.06.2024 சனிக்கிழமை
07 08 27 51 X
83256
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 92,317,021.60
DLB

சனிதா
திகதி 2024.06.08 வெற்றி வாரம் 4633
03 20 25 65 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,044,300.80
ரூ.100,000/- 90033
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4184 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.06.08 தினம் சனிக்கிழமை
24 37 49 56 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,981,749.20
370938
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 20 02 09 10 36
1648 சிவப்பு 08.06.2024 சனிக்கிழமை
930363
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 526,591,764.20
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2298
சீட்டிழுப்பு திகதி : 2024.06.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 118,622,128.80
05 25 42 56 L
818594
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகத்தில் **Deutsch** ஜேர்மனி, சுவிஸ்
செல்வோர்க்கான A1, A2, and B1 வகுப்புக்கள்
N.Thenuja, T.Nanthan
IELTS - லண்டன் (UK), கனடா
IELTS Life skill A1 திருமணம் முடித்து UK செல்பவர்க்கான வகுப்புக்கள்
S.Kubenthiny, JP. Sithiran
சிவன் கோவிலுக்கு முன்பாக, Station Road
077 729 1307 - 077 374 3404
(1151)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்
OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
T.P : 077 780 3970, 074 007 1970
(861)

## win repair

உங்கள் குளிர்சாதனப் பெட்டிகளும், சலவை இயந்திரங்களும் A/C களும் பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள். உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கிறோம்.
076 834 6136
076 906 4682
(1141)

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை நகரை அண்மித்த டச்சு வீதியில் 1 1/2 பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட, சீரமைக்கப்பட்ட 20 அடி பாதையுடன் 9 காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (UDA, பிரதேச சபை அனுமதி பெறப்பட்டது)
077 076 7114
(C-0560)

## மணப்பெண் தேவை

- நல்லூர், இந்து, கௌரவகுலம், 1976, அச்சுவினி, MSc, Network Engineer, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- மானிப்பாய், இந்து, கௌரவகுலம், 1989, விசாகம், Double Degree, Australia Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- தெல்லிப்பளை, இந்து, கௌரவகுலம், 1990, மகம், BBA, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கந்தர்மடம், இந்து, கௌரவகுலம், 1977, உத்திரட்டாதி, MSc, கனடா Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- இணுவில், இந்து, கௌரவகுலம், 1989, புனர்பூசம், BSc, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- புத்தூர் - நவிண்டில், இந்து, கௌரவகுலம், 1984, பரணி MSc Engineering, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கோண்டாவில் - சாவகச்சேரி, இந்து, கௌரவகுலம், 1978, ரோகிணி, BE Electronics Engineer, Denmark மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- புலோலி, இந்து கௌரவகுலம், 1993, புனர்பூசம், Bachelor, Software Engineer, Sweden மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கொக்குவில் - கரவெட்டி, இந்து, கௌரவகுலம், 1978, உத்திராடம், Master of Engineering, Singapore மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(1160)
S.Sharma J.P Astrologer | 077 539 3728 | 077 803 8193


## சிங்கள மொழி

(22வது பிரிவு)
ஆசிரியர்கள் மற்றும் அரச சேவையில் கடமை புரியும் அனைவருக்குமான அடிப்படை எழுது/ பேச 1 1/2 மாதத்தில் முழுமையாக கற்றுக் கொள்ளலாம்.
077 335 4530
077 695 4530
(1149)

## மணமகன் தேவை

யாழ் இந்து உயர் குருகுலம், 1992 பூரட்டாதி 4ம் பாதம், கொழும்பில் அரச வங்கியொன்றில் உயர் பதவி வகிக்கும் (Assistant Director) பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.
076 561 4313
(1148)

WP LEO (Pvt) Ltd




WE ARE LOOKING FOR
Frontend Developer
Are You Ready to join Us?
Degree Not Required
Apply Now!
Qualifications:
# Responsive Web Design
# HTML, CSS, JavaScript
# RESTful Services/APIs
# CMS
Location: Jaffna | Job Type: Full-time
(1131)
+94 771 127 614

## வேலைவாய்ப்பு

PickMe நிறுவனத்தில் பணியாற்ற Sales Men தேவை. முழு நேரம் அல்லது பகுதி நேரம். ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
077 473 7737
(1150)

## வேலைவாய்ப்பு

இங்கிலாந்தில் உள்ள Software Company க்கு கீழ் வரும் Software language தகைமை உள்ளவர்கள் பணிக்கு சேர்க்கப்படவுள்ளார்கள். இவற்றில் ஏதாவது ஒரு Software language தெரிந்தால் அது போதுமானது.

1) Golang Developers - 1 வருடம் அனுபவம்
2) Flutter Developers - 1 வருடம் அனுபவம்
3) Creative Graphics Designers - 1 வருடம் அனுபவம்

உங்களது Biodata ஐ கீழ் காணும் Email முவரிக்கு உடனடியாக அனுப்பவும்.
**HR@ntsretail.co.uk**
(1098)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-0562)

V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

## விமலம் திருமண சேவை

யாழ்/ கனடா சர்வதேச சேவை தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன் / மணமகள் தேவையெனின் எம்முடன் தொடர்பு கொள்ளவும். கனடா, லண்டன், சுவிஸ், பிரான்ஸ் மணமகன் / மணமகள் உள்ளன.
+1 437 244 6737, +1 647 657 1347
(கனடா) 077 240 9276 தாயகம்
(779)

## வீடு விற்பனைக்கு

புனித ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு அருகாமையில் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய 1¾ பரப்பு வீடு விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
(1127)
தொடர்புகளுக்கு: 076 116 3919

## Laptop விசேட விலைக்கழிவில்



O/L, A/L மாணவர்களுக்கானது
I5 Laptop 48750/=
தொடக்கம் விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்
SKY Computer
189 1/1 K.K.S Road, Jaffna
(C-0561)
021 222 1417, 075 069 8608

## V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0562)

## Sejaya Micro Credit Ltd

வட மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் நுண்நிதியியல் துறையில் வேலைவாய்ப்புக்கள்

கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் உயர்ந்தபட்சமான வெகுமதிகளுடன் வேலைவாய்ப்பு
தகுதிகள் - A/L எழுதி இருத்தல், சாரதி அனுமதிப்பத்திரம், நுண்நிதியியல் துறையில் அனுபவம்
கிளைகள் - களுவாஞ்சிகுடி, திருக்கோவில், சுன்னாகம் மற்றும் மன்னார்
பதவிகள் - போர்ட்போலியோ தர உத்தியோகத்தர் (PQO) மற்றும் கள அபிவிருத்தி உத்தியோகத்தர்
பாடசாலை படிப்பை முடித்தவர்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள் மற்றும் ஆண்கள்/ பெண்கள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
"சேஜயா குழுவுடன் உங்கள் தொழில் அபிவிருத்தியை உருவாக்குங்கள்"
தொடர்புகளுக்கு - 076 193 2441
உங்கள் சுயவிபரக்கோவையை அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி - தலைமைக் காரியாலயம் - careers@sejayacredit.com
Location - No: 219, Station Road, Udahamulla, Nugegoda, Sri Lanka.
(1147)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 274/= | (Max)3Kg |
| 1 Kg Prima கோதுமை மா | - 174/= | |
| 5 Kg Prima கோதுமை மா | - 980/= | ~~1150/=~~ |
| 1 Kg றவை | - 286/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 410/= | |
| 1 Kg அரிசி மா | - 205/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~110/=~~ |
| 750ml நல்லெண்ணை | - 1455/= | ~~1550/=~~ |
| 01 Supiri மீன் ரின் | - 490/= | ~~650/=~~ |
| 1Kg சன்லைட் பவுடர் றோஸ் | - 350/= | ~~450/=~~ |
| 180ml Chik சம்போ | - 390/= | ~~480/=~~ |
| 400g சஸ்ரயன் | - 3600/= | ~~3900/=~~ |
| 400g வட்டவல தேயிலை | - 999/= | ~~1140/=~~ |
| 70g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |

400g Anchor
1000/=



~~1050/=~~
தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்
பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.
(1161)
Happy Supermarket 0777 8080 30


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org